
*அத்தியாயம் 4*

# கைத்தொழில்

## 4.1 பொதுவான போக்கு

2001இல் கைத்தொழில் துறையின் செயலாற்றமானது குறைவடைந்த கேள்வி, அதிகரித்த உற்பத்திச் செலவு மற்றும் மின்வெட்டுக்கள் ஆகியவற்றினால் மிகவும் பாதகமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடாக அளவீடு செய்யப்பட்ட கைத்தொழில்களின் வெளியீடு 2001இல் 3.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் வெளியீட்டில் காணப்பட்ட பெருமளவான குறைப்பு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளுக்குப் பொருட்களை வழங்கும் கைத்தொழில்களில் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்ட மெதுவான தன்மை ஆகியனவே காரணங்களாகும். கடந்த பத்தாண்டுகளில் கைத்தொழில் வெளியீட்டில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டது இதுவே முதல் முறையாகும். தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 2000ஆம் ஆண்டில் 11 சதவீதத்தாலும் கடந்த பத்தாண்டுக் காலப்பகுதியில் ஆண்டுக்கு 9.5 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன. அணியும் ஆடை, புடவை, மட்பாண்டம், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் பட்டைதீட்டப்பட்ட வைரம் போன்ற முக்கியமான ஏற்றுமதிக் கைத்தொழில்களே 2001இல் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தவையாகும். வெளியீட்டின் இவ்வீழ்ச்சிக்கு, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் செத்தெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் மோசமடைந்த உலகளாவிய மந்தநிலை மேலும் தீவிரமாகியமை, கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம் மீதான பயங்கரவாதத் தாக்குதல், அதிகரித்த உற்பத்திச் செலவு, மின்வெட்டுக்கள், அரசியல் ரீதியான மற்றும் யுத்தத்தோடு தொடர்புடைய நிச்சயமற்றதன்மை காரணமாக வர்த்தக நம்பிக்கைத் தன்மையிலேற்பட்ட குறைப்பு மற்றும் அமைப்பு ரீதியான தடைகள் ஆகியனவே காரணங்களாகும். தயாரிப்புத்துறையின் 83 சதவீதத்துக்கு வகைகூறிய தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு, 2001ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொதுவான வீழ்ச்சியின் 41 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது.

உலகளாவிய பொருளாதாரம் ஏற்கனவே நலிவடைந்திருந்தமைக்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்கா நாடுகளில் செத்தெம்பர் 11இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது, உலகளாவிய பொருளாதார நடவடிக்கையையும் மற்றும் வர்த்தகரீதியான ஆர்வத்தினையும் நேரடியாகப் பாதித்ததுடன் இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியில் பெருமளவு வீழ்ச்சியொன்றையும் குறிப்பிடத்தக்களவில் ஏற்படுத்தியது. உலகளாவிய பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகத் தீவிரமடைந்த, வளர்ச்சியில் பாதிப்பையேற்படுத்தக்




வரைபடம் 4.1
கைத்தொழில் உற்பத்திகளின் வளர்ச்சியும் உள்ளமைப்பும்

கூடிய இடர்ப்பாடுகள், கொடுக்கல் வாங்கல் செலவுகளை அதிகரிக்கவும், செயற்றிறன் மற்றும் குறைந்த உற்பத்தியாக்கத்தை மேலும் குறைக்கவும் உதவின. 2001ஆம் ஆண்டு யூலை 24இல் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல், ஏற்றுமதி அடிப்படையிலான கைத்தொழில்களின் மீது மோசமான தாக்கத்தையேற் படுத்தியது. கட்டுநாயக்காவில் ஏற்பட்ட அனர்த்தத்தின் உடனடித் தாக்கமாக சில கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தைக் கடந்து சென்றமையினால், ஏற்றுமதிச் சரக்கை குறிப்பிட்ட நேரத்தில் கப்பலேற்ற முடியாமற் போய்விட்டது. உற்பத்திக்குத் தேவைப்பட்ட மூலப்பொருட்கள் சுயஸ் துறைமுகங்களில் இறக்கப்பட்டதுடன், இவை கப்பற்கட்டணத்தையும் சுற்றிவரும் நேரத்தையும் அதிகரிக்கச் செய்தன. கொழும்புக்கு வருகைதரும் விமானங்கள் மற்றும் கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணம் மீதான யுத்தமிகைக் கட்டண விதிப்பு, ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையை மோசமாகப் பாதித்தது. ரூபாவின் பெறுமதித் தேய்வினால் சில நன்மைகள் ஏற்பட்டபோதிலும், செலவு அதிகரிப்புக்களை ஈடுசெய்ய இவை போதுமானவையாகக் காணப்படவில்லை.

ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் மிகப்பெரும் துணைத்துறையாக விளங்கும் ஆடை மற்றும் புடவைத்துறை 2000ஆம் ஆண்டின் 15.9 சதவீத அதிகரிப்புடனொப்பிடுகையில் 2001இல் 8.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத் தாக்குதலைத் தொடர்ந்து வாங்குநர்கள் தமது கட்டளைகளை நீக்கி அல்லது தாமதங்களுக்காக உயர்வான கழிவுகளை வேண்டியமையினால் பல நிறுவனங்கள் பெருமளவு சரக்குப்பட்டியல்களை ஒன்றுசேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயின. கொழும்புக்கும் மற்றும் கொழும்பிலிருந்துமான பறப்புக்களைப் பெறுதியான பயண எச்சரிக்கைகள் மற்றும் குறிப்பாக செத்தெம்பரிலிருந்து வசந்தகால மற்றும் கோடைகால கட்டளைகளை வழமையாக மேற்கொள்ளும் நேரத்தில் பல வாங்குநர்களை இலங்கைத் தவிர்க்கச் செய்தன. உரிய நேரத்தில் விநியோகிக்கப்பட வேண்டியது அவசியமாகக் காணப்படும் உயர் பெறுமதி ஆடைகள் மற்றும் ஊக்குவிப்புக்கான ஆடைகள் அணியும் ஆடை ஏற்றுமதிகளில் மிக மோசமான தாக்கமொன்றினை ஏற்படுத்தின.

மேலும், உலகளாவிய அணியும் ஆடை மற்றும் புடவைச் சந்தையானது, ஐக்கிய அமெரிக்க நாடுகளினால் சில ஆபிரிக்க நாடுகளுக்கும் மற்றும் கரிபியன் நாடுகளுக்கும் வழங்கப்பட்ட சிறப்புச் சலுகைகள் மற்றும் கிழக்கைரோப்பா மற்றும் சீனாவிலுள்ள குறைந்த செலவிலான தயாரிப்பு நாடுகளிலிருந்தான அதிகரித்த வழங்கல் ஆகியவற்றின் காரணமாக அதிகளவில் போட்டிதன்மையைக் கொண்டதாகக் காணப்பட்டது. கிழக்கைரோப்பிய நாடுகள், புவியியல் ரீதியில் ஐரோப்பிய சமூகத்துக்கு மிக அண்மையில் காணப்படுவதால் சென்றடையும் நேரத்தின் நியதிகளில் இவை அதிக போட்டித் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. போட்டித்தன்மையுடைய விலைகளை வழங்கிய, குறைந்த செலவில் தயாரிக்கும் நாடுகள் அதிகளவிலான வாங்குநர்களைக் கவர்ந்திருந்தன. சீனா 2001இல் உலக வர்த்தக நிறுவனத்தில் இணைந்து கொண்டதன் பின்பு தனது சொந்த சீத்தை மற்றும் துணைப்பொருள்களின் தயாரிப்புத்தளம், மிகப்பெரும் தயாரிப்புத் திறன் மற்றும் சார்புரீதியில் மலிவான உழைப்பு ஆகியவற்றின் துணையுடன் இலங்கையினால் எதிர்நோக்கப்படும் போட்டித்தன்மையைத் தீவிரப்படுத்தி, பன்னாட்டுச் சந்தையில் உறுதியாக நுழைந்தது.

சீமெந்து, கல்நார்த்தகடுகள், கொங்கிறீட் உற்பத்திகள், கம்பிகள், விலங்குத்தீன், பிளாத்திக்கு பொதியிலடைக்கும் பொருட்கள் மற்றும் உலோக உற்பத்திகள் போன்ற இடைநிலைப் பொருட்களைத் தயாரிக்கும் உள்நாட்டுச் சந்தைகளுக்குப் பொருட்களை வழங்கும் பல்வேறு கைத்தொழில்களின் வெளியீடு 2001இல் மிதமாக வளர்ச்சியடைந்தது. பெற்றோலிய உற்பத்திகள், மென்பானங்கள், புகையிலை, வேளாண்மை இரசாயனங்கள், வளமாக்கி, தெங்கு உற்பத்திகள், சீனி, தீந்தைகள் மற்றும் கண்ணாடி ஆகியவற்றின் வெளியீடு 2001இல் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தமையின் காரணமாக நுகர்வோர் செலவீடு குறைந்தமையானது உள்நாட்டுக் கேள்வியில் மோசமான தாக்கத்தையேற்படுத்தியது. மந்தமடைந்த சந்தை நிலைமைகளில், சில தயாரிப்பாளர்கள் வட்டியில்லாத இலகு கொடுப்பனவுத் திட்டங்கள், கொடுப்பனவுப் பத்திரங்கள், சீட்டிழுப்புக்கள் மற்றும் தமது உற்பத்தி எல்லைகளை அதிகரிக்கச் செய்யக்கூடிய பல்வேறு வடிவிலான ஊக்குவிப்புக்கள் போன்ற விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அறிமுகம் செய்திருந்தன.

மந்தமடைந்த பன்னாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்வியுடன் தயாரிப்பாளர்கள் அமைப்புரீதியான பல்வேறு தடைகளையும் எதிர்நோக்கினர். கடுமையான தொழிற் சட்டங்களின் காரணமாக கேள்வியில் ஏற்பட்ட குறைப்பைத் தடை செய்வதற்காக தயாரிப்பாளர்கள் தொழிற்பட்டியலைப் படிப்படியாகக் குறைக்க முடியாமலிருந்தது. இவர்கள் தொழிலாளர்கள் வேலையில் சேருதலும் அதைவிட்டு உடனடியாக நீக்குதலும், தேர்ச்சிக் குறைபாடு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியவற்றையும் எதிர்நோக்கினர். சிக்கல் வாய்ந்த சட்டமுறைமையானது நீதிமன்ற

**அட்டவணை 4.1**
**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி**
**(1990 நிலையான விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(அ) | 2000 | 2001(அ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | **37,146** | **40,756** | **41,742** | **44,241** | **45,595** | **6.0** | **3.1** |
| உணவு, ஏனையவை | 22,343 | 24,910 | 26,330 | 28,094 | 29,146 | 6.7 | 3.7 |
| வெறியக் குடிவகை | 2,961 | 3,458 | 3,327 | 3,397 | 3,478 | 2.1 | 2.4 |
| குடிபானம் | 6,032 | 6,590 | 6,432 | 7,210 | 7,548 | 12.1 | 4.7 |
| புகையிலை | 5,810 | 5,798 | 5,653 | 5,540 | 5,423 | -2.0 | -2.1 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | **69,769** | **72,943** | **78,282** | **90,716** | **83,029** | **15.9** | **-8.5** |
| அணியும் ஆடைகள் | 59,780 | 62,602 | 67,861 | 79,126 | 72,300 | 16.6 | -8.6 |
| புடவைகள் | 6,926 | 7,226 | 7,197 | 8,140 | 7,472 | 13.1 | -8.2 |
| தோல் | 3,063 | 3,115 | 3,224 | 3,450 | 3,257 | 7.0 | -5.6 |
| 3.மர, மர உற்பத்திகள் | **1,334** | **1,378** | **1,423** | **1,544** | **1,487** | **8.5** | **-3.7** |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | **3,561** | **3,446** | **3,412** | **3,624** | **3,732.0** | **6.2** | **3.0** |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | **32,082** | **36,223** | **36,281** | **41,140** | **38,849** | **13.4** | **-5.6** |
| இரசாயனம், தீந்தை, வளமாக்கி | 4,584 | 5,182 | 5,571 | 6,379 | 6,155 | 14.5 | -3.5 |
| இறப்பர் | 5,539 | 6,015 | 6,082 | 6,824 | 6,104 | 12.2 | -10.6 |
| பிளாத்திக்கு மற்றும் பிவிசி | 3,584 | 3,874 | 4,292 | 4,571 | 5,051 | 6.5 | 10.5 |
| மருந்தாக்கல் பொருட்கள், சுத்தமாக்கிகள், ஏனையவை | 8,797 | 9,853 | 10,336 | 10,956 | 10,532 | 6.0 | -3.9 |
| பெற்றோலியம் | 9,578 | 11,299 | 10,000 | 12,410 | 11,007 | 24.1 | -11.3 |
| 6.உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | **13,914** | **14,619** | **15,740** | **16,091** | **16,010** | **2.2** | **-0.5** |
| வைரம் பதனிடல் | 4,753 | 4,360 | 5,049 | 5,175 | 5,056 | 2.5 | -2.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1,926 | 1,991 | 2,029 | 2,053 | 1,808 | 1.2 | -11.9 |
| சீமெந்து | 3,896 | 4,628 | 4,785 | 4,823 | 4,943 | 0.8 | 2.5 |
| கட்டடப் பொருட்களும் ஏனையவையும் | 3,339 | 3,640 | 3,877 | 4,040 | 4,203 | 4.2 | 4.0 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | **1,671** | **1,856** | **1,917** | **2,024** | **2,096** | **5.6** | **3.6** |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | **7,437** | **8,235** | **8,680** | **9,071** | **9,261** | **4.5** | **2.1** |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | **3,904** | **4,093** | **4,375** | **4,559** | **4,627** | **4.2** | **1.5** |
| மொத்தம் | **170,818** | **183,549** | **191,852** | **213,010** | **204,686** | **11.0** | **-3.9** |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

நடவடிக்கைகளைப் பூரணப்படுத்துவதில் நீண்ட தாமதங்களை ஏற்படுத்தியிருந்தது. தயாரிப்பாளர்கள் அடிக்கடியேற்பட்ட மின்வலு தடங்கல்கள் மற்றும் மின்வலு அளவுக்கூறில் ஏற்பட்ட தளம்பல்கள் ஆகியவற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். உள்நாட்டுச் சந்தையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் போட்டித் தன்மையானது பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் பாகங்களின் இறக்குமதி, முதலீட்டுச் சபை உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தைக்கு முறையற்ற முறையில் சென்றமை மற்றும் ஆட்சி தொடர்பான தாமதங்கள் போன்ற நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளினால் நலிவுற்றது. குறுங்காலக் கடன்பாடுகளின் உயர்வட்டிச் செலவு, காசோலை அதிகளவில் திரும்பிய நிகழ்வுகள், அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தாமதங்கள் ஆகியன கைத்தொழிலாளர்களுக்கு திரவத்தன்மைப் பிரச்சனைகளையேற்படுத்தின. இலங்கையில் வர்த்தக மீளமைப்புத் தொடர்பான சட்டங்கள், சீரான வர்த்தக மீள்சீராக்கம் மற்றும் மீளமைப்பினை அனுமதிக்கவில்லை எனினும், சில நிறுவனங்கள் கவர்ச்சிகரமான சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டங்களைப் பயன்படுத்தி தம்மை மீளமைத்துக் கொள்ள கூடியதாயிருந்தன.


மந்தமடைந்த பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து ஏற்பட்ட உழைப்புக்கான குறைந்த கேள்வியானது, குறைவான உழைப்பு உற்பத்தியாக்கத்தினால் மேலும் மோசமடைந்தது. முதலீட்டுச் சபையல்லாத 480 நிறுவனங்களின் கைத்தொழில் அளவீடு, குறைவான இயலளவுப் பயன்பாடு கட்டுப்பாடான தொழில் ஒழுங்கு விதிகள், வசதியற்ற வேலை நிலைமைகள் தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள் போதியளவில் காணப்படாமை, தொழிலாளர் வேலையில் சேருதலும் உடனடியாக விட்டு நீங்குதல் மற்றும் வரவின்மை மற்றும் தொழில் வழங்குநர்-ஊழியர் உறவு முறைகள் நல்லமுறையில் காணப்படாமை ஆகியன காரணமாக 2001ஆம் ஆண்டில் உழைப்பு உற்பத்தியாக்கத்தில் 2.5 சதவீத வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டுகிறது. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு, கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் மீது அழுத்தத்தையேற்படுத்தியது. இலங்கையில் வீழ்ச்சியடைந்து செல்லும் உற்பத்தியாக்க வளர்ச்சியானது போட்டித்தன்மையுள்ள அதன் நீண்டகால நன்மையை இல்லாமற் செய்தல்

கவலைக்குரியதாகும். உலகின் ஏனைய இடங்களில் மலிவான உற்பத்தித் தளங்கள் ஏற்படக்கூடிய போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றமையே இதற்குக் காரணமாகும். உழைப்பு உற்பத்தியாக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காக, மனித மூலதனத்திலான முதலீடு, தொழில்நுட்பத்தை முன்னேற்றுதல், நடுநிலையான செயலாற்ற மதிப்பீட்டுமுறை மற்றும் வெகுமதி முறைகள் ஆகியன அவசியமாகக் காணப்படுகின்றன.

முதலீட்டுச்சபையல்லாக் கைத்தொழில் அளவீட்டுத்தரவைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட கைத்தொழில் துறையின் இலாபத்தன்மையானது 2000ஆம் ஆண்டின் 13.7 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 10.5 சதவீதத்துக்கான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைக் காட்டியது. அதிகரித்த பொதுவசதிகளின் விலைகள், கூட்டுவரி மீதான மிகைக் கட்டணம் மற்றும் இறக்குமதிகள் மீதான மிகைக்கட்டணம் ஆகியன கைத்தொழில் துறையின் இலாபத்தன்மையைப் பாதித்தன.

கொள்கைப் பக்கத்தில் நோக்குகையில் அரச, தனியார்துறையினர் வழிநடத்தப்பட்ட ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கொள்கையைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டில், அரச, முதலீட்டுசசபை மற்றும் முதலீட்டுச்சபையல்லாத அமைப்புக்களை அணியும் ஆடைத்துறையில் இணைத்துக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. இதன்கீழ், தயாரிப்பு வர்த்தகத்தையும் குறைந்தது 50 ஊழியர்களுடன் அணியும் ஆடை உற்பத்திகளின் ஏற்றுமதியையும் மேற்கொள்வதுடன் அதன் வெளியீட்டில் குறைந்தது 90 சதவீதமானவற்றை அத்தகைய தொழில்முயற்சியானது ஏற்றுமதி செய்யுமிடத்து முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதல் வழங்குவதற்குத் தகுதியுடையனவாகக் கணிக்கப்படும். நாட்டின் எதிர்காலக் கைத்தொழிற் கொள்கையானது

வரைபடம் 4.2
முக்கிய கைத்தொழில் துணைத் துறைகளின் செயலாற்றம்
(1990 நிலையான விலைகளில்)




வர்த்தகத்தைக் கொண்டு நடாத்துவதில் காணப்படும் தடைகள் மற்றும் தேவையற்ற கட்டுப்பாடுகளை அகற்றும் விதத்தில் நெறிப்படுத்தப்பட வேண்டும். எடுக்கப்படும் நேரத்தை அறிவிக்கும் தேவைப்பாடுகள் மற்றும் தேவையற்ற ஒப்புதல்கள் போன்ற குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அரசின் ஒழுங்கு விதிகள், சந்தைப் பொறிமுறையின் நன்மைகளை அடைவதற்காக நீக்கப்பட வேண்டும். ஒழுங்குவிதிகள் அவசியமாகத் தேவைப்படுமிடங்களில் அவை தெளிவாகவும், குறைந்த கட்டுப்பாடுகள் மற்றும் தலையீடுகளின் அடிப்படையிலான தளத்தில் உருவாக்கப்பட்டவையாகவும் காணப்படுவதுடன் இம்முறையின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு பணி முதல்வர்களுக்கான அதிகாரம் மற்றும் உரிமையை ஊக்குவித்தலும் வேண்டும். அரசின் எதிர்காலக் கைத்தொழிற் கொள்கை, உலகளாவிய வர்த்தகத்தை, சிறப்பாக வர்த்தக கலந்துரையாடல்கள் விடயத்தில் இலகுவாக்குவதிலும் வர்த்தகச் சூழலை முன்னேற்றுதல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல், கம்பனி நிருவாகத்தை முன்னேற்றுதல் மற்றும் அறிவு மற்றும் மனித மூலதனத்திலான முதலீட்டின் நன்மைகளை சிறந்த முறையில் நிறுவனங்கள் பயன்படுத்துவதை இயலச் செய்தல் ஆகியவற்றிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும். இலங்கையின் கைத்தொழில் தளத்தைப் பன்முகப்படுத்தி, விரிவாக்கக் கூடிய உபாயமொன்றுக்கான தேவை காணப்படுகிறது. தற்போதுள்ள ஒடுக்கமான தளமானது வெளி அதிர்வுகளினால் பாதிக்கப்படக்கூடியதாகக் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

## 4.2 உற்பத்தி

2001ஆம் ஆண்டில் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு, 480 முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்கள் அரசதுறைத் தொழில்முயற்சிகளின் வெளியீடு, முதலீட்டுச் சபை நிறுவனங்களிலிருந்தான ஏற்றுமதித் தரவுகள் ஆகியவற்றை உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட ஆண்டுக் கைத்தொழில் உற்பத்தி அளவீடு - 2001இன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப் பட்டது. இம் மதிப்பீடுகளின் படி, தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு உண்மை நியதிகளில் 3.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் பெயரளவு நியதிகளில் 7.7 சதவீதத்தால் அதிகரித்து, 2001ஆம் ஆண்டில் தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்காக 12.1 சதவீதங் கொண்ட முழுமையான விலைச்சுருக்கியொன்றை ஏற்படுத்தியது. இம்மதிப்பீடுகள், தொழிற்சாலைக் கைத்தொழில்கள் போன்ற, தயாரிப்புக் அணியும் ஆடை மற்றும் புடவைத் துணைத்துறைகளின்

### சிறப்புக் குறிப்பு-6

## கைத்தொழில்களின் நலிவடைவு-மூல காரணங்களும் தீர்வுகளும்

கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்று அதன் தேறிய பெறுமானத்தை விஞ்சிய ஒன்று திரண்ட இழப்புக்களை கொண்டுள்ளதுடன் அதன் தொடர்ச்சியான வாழ்விற்காக அடிக்கடி வெளியிலிருந்து உட்பாய்ச்சப்படும் நிதிகளில் தங்கியிருக்கின்ற நிலைமையே கைத்தொழில் நலிவடைவு எனப்படுகின்றது. கைத்தொழில் நலிவடைவும், வியாபார முறிவுகளும் சந்தைப் பொருளாதாரமொன்றின் பொதுவான நிகழ்வுகளாகும். இவை பெரும்பாலும் வழங்குனர்களின் எண்ணிக்கையிலே ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது மேம்பட்ட தரத்திற்கு அல்லது குறைந்த செலவிற்கு இட்டுச்செல்லும் புதிய கண்டுபிடிப்புக்கள் என்பனவற்றால் அதிகரிக்கப்பட்ட போட்டியின் விளைவுகளாகும். நெகிழ்ச்சித் தன்மைகளற்ற சந்தை, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், போதிய உட்கட்டமைப்பு வசதிகளின்மை, கொள்கை ஒருங்கிணைப்பில் தோல்வி என்பவற்றின் விளைவாகவும் நலிவடைவு ஏற்படலாம். இறுதியாக கூறப்பட்ட பிரச்சனைகளுக்கு உறுதியான அரச தலையீட்டின் மூலம் தீர்வு காணமுடியும். ஆனால் முன்னர் கூறப்பட்டவை யோசேப் சுப்பீற்றரினால் 'ஆக்கபூர்வ அழிவு' என்பதன் மூலம் விவரிக்கப்பட்டவாறு சந்தையினால் இயற்கையான தேர்வினை விளைவிக்கும் வழிமுறையாகும். எனினும் ஆக்கபூர்வ அழிவு விடயத்திலும் கூட நடைமுறையிலுள்ள சட்டங்களும், ஒழுங்கு விதிமுறைகளும் நிறுவனமொன்றின் தொழிற்பாடுகளை மீள ஒழுங்குபடுத்தி அதன் மூலதனத்தை பயனுறு நிதியுடையதாகவும், செயற்றிறனுடனும் மீள பயன்படுத்துவதற்கான நெகிழ்ச்சியினை வழங்கல் வேண்டும்.

கைத்தொழில் நலிவடைவு பொதுவாக உற்பத்தி இழப்புக்கள், தொழில் இழப்புக்கள், வரி வருமான குறைப்பு என்பனவற்றை விளைவிக்கும் வேளையில் உடமையாளர்களினதும், கடன் வழங்குனர்களினதும் அருமையான மூலவளங்களை முடக்கி வைக்கின்றது. கைத்தொழில் நலிவடைவின் பரிமாணமும் நிகழ்வும் அரசுக்கும், நாட்டின் முழு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முறைக்கும் பெரும் கவலையைத் தரும் விடயங்களாக அமைவதற்கு முழுமையான கைத்தொழில் நலிவடைவானது பொருளாதாரம் மீதான பொதுமக்களின் நம்பகத் தன்மையை பாதிப்புறச் செய்து நாட்டின் பொதுவான முதலீட்டு சூழ்நிலையில் கடுமையான உடனடி எதிர் தீர்வுகளை ஏற்படுத்தி விடலாம் என்பதனினாலேயாகும். இதனால் கைத்தொழில் நலிவடைவுக்கான மூலகாரணம் அல்லது காரணங்களை கண்டறிந்து நலிவடைவிலிருந்து மீட்சி பெறுவதற்குரிய அத்தியாவசியமானதும் பொருத்தமானதுமான தீர்வு வழிமுறைகளை உரிய நேரத்தில் எடுப்பது அவசியமாகும். நலிவடைவுக்கான அறிகுறிகள் உரிய நேரத்தில் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியப்பட்டு உடனடியாக அதற்கு பரிகாரம் காணப்படின் அது குறைந்த செலவினையும் குறைந்த பாதிப்பினையும் விளைவிக்கும். தீர்வு வழிமுறைகள் முதலில் அனைத்து கைத்தொழில்களையும் பொதுவாக பாதிக்கின்ற காரணிகளிலும் அதன் பின்னர் தனிப்பட்ட கைத்தொழில் அலகுகளை பாதிக்கின்ற தனிப்பட்ட காரணிகளிலும் கவனத்தை செலுத்த வேண்டும்.

நலிவடைவினை விளைவிக்கும் உள்ளக காரணிகளை, ஆரம்பித்தலுடன் தொடர்பான குறைபாடுகள் மற்றும் தொழிற்பாட்டு கட்டுப்பாடுகளும் குறைபாடுகளுமென பரந்தளவில் வகைப்படுத்த முடியும். ஆரம்பித்தலுடன் தொடர்பான குறைபாடுகள் பிழையான தொழிற்சாலை அமைவிடத் தெரிவு, பொருளாதார ரீதியிலான ஆற்றல் திறனை பாதிக்கும் செயற்றிட்டத்தின் அளவு, கேள்வி மிகை மதிப்பீட்டு, தகுந்த திட்டமிடலின்மை, திட்டமிடப்பட்ட செலவினை விஞ்சிய செலவு, தேவைப்பாடுகளின் குறை மதிப்பீடு, போதிய ஆரம்ப மூலதனமின்மை, தொழிற்பாட்டு கட்டுப்பாடுகளும், குறைபாடுகளும் உற்பத்தி சந்தைப்படுத்தல், நிதி, தொழிலாளர்கள் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பிரச்சனைகளை உள்ளடக்குகின்றது.

உற்பத்தியுடன் தொடர்புபட்ட பிரச்சனைகளாக பொருத்தமற்ற உற்பத்திக்கலவை, பழைய பொறிகளையும் இயந்திரங்களையும் தொழிற்படுத்தல், மூலப் பொருட்களுக்கான பற்றாக்குறை, மூலப்பொருட்கள் மீதான உயர் சுங்கத் தீர்வை மற்றும் ஏனைய அரச வரி விதிப்புக்கள், நீர், மின்சாரம் போன்றவற்றிற்கான அதிகரித்த கட்டணங்களும் அடிக்கடி இடம்பெறும் மின்துண்டிப்புக்கள் மற்றும் மோசமானதரக்கட்டுப்பாடுகள் என்பன விளங்குகின்றன. சந்தைப்படுத்தல் பிரச்சனைகளாக குறைவடைந்த

## சிறப்புக் குறிப்பு-6 (தொடர்ச்சி)

உள்நாட்டு வெளிநாட்டு கேள்வி, பொருட்களின் குறைந்த தரம் மற்றும் ஒப்பீட்டளவில் உயர்ந்த தரம் கொண்ட இறக்குமதிகளுடனான கடுமையான போட்டி, நுகர்வோர் விருப்புக்களிலான மாற்றம், உறுதியான சந்தைப்படுத்தல் உபாயமும் திட்டமிடலின்மை, தனியொரு வாடிக்கையாளரில் அல்லது தனியொரு உற்பத்திப் பொருளில் தங்கியிருத்தல், குறைபாடுடைய விலையிடல் கொள்கை மற்றும் குறைந்த சந்தை ஆராய்ச்சி என்பன விளங்குகின்றன. நிதிப் பிரச்சனைகளாக நிதியியல் முறைகேடுகள், குறைந்த மூலதனத் தளமும் உயர்ந்த கடன் மூலதன விகிதாசாரமும், வளமற்ற நிதித்திட்டமிடலும் முகாமைத்துவமும், பிழையான கிரயமிடல் மற்றும் கணக்கீட்டு முறைகள், நிறுவனத்தின் நிதியை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தல், பற்றாக்குறையான தொழிற்படு மூலதனம் மற்றும் நிதிகளுக்கான அதிகரித்த செலவு என்பன அமைகின்றன. தொழில் பிரச்சனைகளாக உயர் கூலி மற்றும் குறைந்த உற்பத்தியாக்கத் திறன், மோசமான தொழில் உறவுகள், வேலையாட்களுக்கான பற்றாக்குறை, தேர்ச்சியின்மை, தொழிலைவிட்டு விலகுதல் அதிகரித்துக் காணப்படல், இறுக்கமான தொழில்சட்டங்கள் மற்றும் பிணக்குகளை தீர்ப்பதிலான நீண்ட காலதாமதம், அடிக்கடி இடம்பெறும் வேலைநிறுத்தம் உள்ளிட்ட அதிகரித்த தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பன விளங்குகின்றன. முகாமைத்துவ குறைபாடுகளாக தொழில் தேர்ச்சியற்ற முகாமைத்துவம், முகாமைத்துவத்திற்குள்ளேயான கருத்து வேறுபாடு, நேர்மையற்ற முகாமைத்துவம், செயற்றிறனற்ற முகாமைத்துவம், உள்ளக சரிபார்த்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் இன்மை, தொழில் தேர்ச்சி பெற்ற முகாமையாளர்களுக்கான பற்றாக்குறை கீழ் மட்டங்களில் உள்ளவர்களது கருத்துக்கள் முகாமைத்துவத்தை சென்றடையாமை மற்றும் பரவலாக்கப்படாத முகாமைத்துவம் என்பன விளங்குகின்றன.

கைத்தொழில் நலிவடைவிலிருந்து மீட்சி பெறுவதற்கான தீர்வுகளை முன்மொழிவதற்கென நியமிக்கப்பட்ட குழு ஆய்வினை மேற்கொண்டு முக்கிய பல பிரச்சனைகளை இனங்கண்டு பல தீர்வுகளை முன்மொழிந்துள்ளது.[1] கைத்தொழில் அதிபர்களினால் இவ்வளவீட்டின்போது தெரிவிக்கப்பட்ட சில வெளியக பிரச்சனைகளாக பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் இறக்குமதி, இலங்கை முதலீட்டுச் சபையின் செயற்பரப்பின் கீழ்வரும் கைத்தொழில் நிறுவனங்களினால் சட்டரீதியற்ற முறையில் உற்பத்திப் பொருட்கள் உள்ளூர் சந்தைக்கு விடப்படல், பொருட்களை விலை குறித்த பட்டியலிட்டு இறக்குமதி செய்தல், உற்பத்தி செலவிலும் குறைந்த விலையில் பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தல், சுங்கத்தில் இடம்பெறும் காலதாமதமும் ஊழல்களும், ஆடை அனுமதிப்பங்கின் கிடைப்பனவின்மை, பெரும் எண்ணிக்கையான விடுமுறை நாட்கள், மூலப்பொருட்களின் தொடர்ச்சியான வழங்கலின்மை, அரச நிறுவனங்களுக்கு வழங்கல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகளிலான காலதாமதம், வங்கிகள் திருப்பிச் செலுத்தப்படாத கடன்களுக்கு பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களை தன்னிச்சையாக ஏலமிடல், தொழிலதிபர்கள் எதிர்நோக்கும் திடீர் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான அதிகாரங்களை கொண்ட அரச நிறுவனமொன்று இல்லாமை, சிக்கல்கள் நிறைந்த அரச வருவாய் சேகரிப்பு முறைமை மற்றும் வர்த்தக கொள்கையிலான அவ்வப்போதைய மாற்றங்கள் என்பன அமைகின்றன. இக் குழுவினால் முன்மொழியப்பட்ட தீர்வுகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்.

### 1. நிறுவனங்கள்

**தனி நிறுவனமொன்றை ஊக்குவித்தல்**

- நடைமுறையிலுள்ள பல்வேறு நிறுவனங்களையும் குழுக்களையும் ஒன்றிணைத்து அரசு-தனியார் துறை பங்கேற்புடன் வலிமை வாய்ந்த நிறுவனமொன்றை அமைத்தல்.

### 2. தொழிற்சந்தை

**தொழில் சட்டங்கள், ஒழுங்கு விதிமுறைகளின் இறுக்கத் தன்மையை அகற்றல்**

- நெருக்கடியான காலப்பகுதிகளில் அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்தினை செலுத்தி தொழிலாளர்களை குறைப்பதற்கு தொழில்

1 நலிவடைந்த கைத்தொழில்கள் மீதான அளவீடு-முடப்பட்டுள்ள கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பொருளாதார சீராக்கங்கள், வெளியக பொருளாதார திடீர் மாற்றங்கள் என்பவற்றால் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய கைத்தொழில்கள் என்பன குறித்து மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை. இக்குழுவின் உறுப்பினர்களான, மத்திய வங்கியின் ஆளுநர் (தவிசாளர்), துணை தவிசாளர்- தேசிய அபிவிருத்திச் சபை, தவிசாளர்- இலங்கை முதலீட்டுச் சபை, செயலாளர்- கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, தொழில் ஆணையாளர், தவிசாளர்- ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, பணிப்பாளர் நாயகம்- குடிமதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம், பணிப்பாளர் நாயகம்- இறைக் கொள்கை பொருளாதார அலுவல்கள் திணைக்களம், பணிப்பாளர் நாயகம்- தேசிய திட்டமிடல் திணைக்களம்.

## சிறப்புக் குறிப்பு-6 (தொடர்ச்சி)

நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பதற்காக தொழிற்சட்டங்கள் உடனடியாக திருத்தப்படல் வேண்டும்.

- ஊழியர்களை பணியிலிருந்து நீக்கும்போது செலுத்தவேண்டிய இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கான சூத்திரத்தை வெகு சீக்கிரமான இறுதியாக்கல்.
- தொழிலாளர் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு அரசுக்கு கொள்கை விதந்துரைப்புக்களை செய்யும் பொருட்டு தனியார்துறை, தொழிற்சங்கங்கள், வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனங்கள், தொழில் திணைக்களம் என்பவற்றிலிருந்தான பரந்த வீச்சிலான பிரதிநிதித்துவங்களை உள்ளடக்கும் விதத்தில் தேசியதொழில் மதியுரை சபையினை மீள ஒழுங்குபடுத்தி அமைத்தல் வேண்டும்.
- "கூட்டு ஒப்பந்தம்" எண்ணக்கருவை தொழிலாளர்கள் மற்றும் தொழில் கொள்வோரிடையே பிரபல்யப்படுத்தல்.
- தொழில்கொள்வோரின் செலுத்தப்படும் தவணைக் கட்டணப் பங்களிப்புடன் தொழிலற்றோர் காப்புறுதி திட்டமொன்றினை உருவாக்குதல். தேவைப்படின், தொழிலாளர்கள் ஒரு சிறிய வீதப் பங்களிப்பினை செலுத்தல் வேண்டும்.

**தொழிலாளர்கள் பயிற்சியின் பின்னர் அதிகளவில் தொழிலிருந்து விலகிச் செல்வதற்கான தீர்வு.**

- ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய நியதிக் கொடுப்பனவுகளை செலுத்தாது ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கு பயிற்சி பெறுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு கைத்தொழிலதிபர்களுக்கு அனுமதி அளிக்கப்படல் வேண்டும்.
- ஊழியர்களுக்கு இலாபத்தினை பங்கிடும் விசேட கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்தல்.

### தொழில் தேர்ச்சி பற்றாக்குறைக்கான தீர்வு

- கைத்தொழில்களின் இன்றைய தேவையை ஈடுசெய்யும் வகையில் ஏற்கனவேயுள்ள பயிற்சி நிறுவனங்களை மீள ஒழுங்குபடுத்துதல்.
- தொழில் சார்ந்த பயிற்சியை வழங்கும் வகையில் கல்வி முறையிலான சீர்திருத்தத்தினை மேற்கொள்ளல்.
- கைத்தொழில்துறை தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கு மிகவும் அத்தியாவசியமான தேர்ச்சிகளை கொண்டுள்ள வெளிநாட்டவர்களை ஆட்சேர்ப்பதற்கு அனுமதித்தல்.

**தொழிற்சங்க நடவடிக்கைகளை குறைத்தல்**

- தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இரகசிய வாக்கெடுப்பில் மொத்த தொழிலாளர்களில் 50 சதவீதத்துக்கு மேலானவர்களின் சம்மதம் பெறப்பட வேண்டுமென்ற சட்டத்தினை அறிமுகப்படுத்தல்.

**பெரும் எண்ணிக்கையான விடுமுறை நாட்களின் தாக்கத்தினைக் குறைத்தல்**

- வர்த்தகத்துறை, அரச துறை, வங்கிகள் என்பவற்றுக்கான விடுமுறை நாட்களில் ஒத்திசைவினை ஏற்படுத்தல்.
- விடுமுறை நாட்களை வார இறுதிக்கு அருகில் நகர்த்துதல்.
- விடுமுறை நாட்களின் எண்ணிக்கையை குறைத்தல்.

### தொழில் நிறுவனங்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்

- தனியார் துறை நிறுவனங்கள் முகாமைத்துவ பயிற்சியை வழங்கல்.
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பயிற்சி நிறுவனங்களை நிறுவுவதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல்.

**3. வலு**

**அதிகரித்த மின் செலவு மற்றும் மின்தடங்கலுக்கான தீர்வு காணல்.**

- மின் கொள்வனவுத் திட்டங்களை மீள அறிமுகப்படுத்தல்.
- நிலக்கரி வலு செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கைத்தொழில் நிறுவனங்கள் மேலதிகமாக உருவாக்கிய மின்வலுவை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு அனுமதித்தல்.
- மின்வலு திருட்டுத்தனமாகப் பயன்படுவதனை இல்லாதொழித்தல்.
- தற்பொழுது 20 சதவீதத்திற்கும் மேலான மட்டத்திலுள்ள மின்வழங்கல் முறைமையிலான இழப்பினை 2 ஆண்டுகளில் 15 சதவீதத்திற்கும்,

## சிறப்புக் குறிப்பு-6 (தொடர்ச்சி)

5 - 7 ஆண்டுகளில் 12 சதவீதத்திற்கும் குறைப்பதற்கு இலக்கிடல்.

- எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டிராத வலுவினை புதுப்பிக்கப்படக் கூடிய எரிசக்திகள், கைத்தொழில்களிலிருந்தான விரயம் போன்றனவற்றுடனான வலு உருவாக்கத்தினை பயன்படுத்துவது தொடர்பாக கைத்தொழில் அதிபர்களுக்கு கல்வியூட்டல்.
- வலு நுகர்வை சிக்கனப்படுத்தும் உபகரணங்களின் பாவனையை பிரபல்யப்படுத்தி ஊக்குவித்தல்.
- தனியார் துறையின் நீர் மின்வலு உருவாக்கம் மீதான உச்ச இயலளவு கட்டுப்பாட்டை 10 மெ.வா.இலிருந்து 25 மெ.வா.இற்கு மாற்றியமைத்தல். எனினும், சுற்றாடல் தொடர்புபட்ட விடயங்களுக்கு தீர்வு காண்பதில் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

### 4. மூலப் பொருட்கள்

**மூலப் பொருட்களின் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்தல்**

- முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் மீண்டும் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கைகளையும் ஊக்குவித்தல்.
- அத்தியாவசியமான மூலப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான மிகை வரியை நீக்குதல்.

**மூலப்பொருட்கள் மீதான தீர்வையை நீக்குதல்**

- இலங்கையில் உற்பத்தி செய்யப்படாததும் மூலப்பொருளாக இனங்காணப்படக்கூடியதுமான மூலப்பொருட்கள் மீது பூச்சிய தீர்வை விதித்தல்.

### 5. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்

**பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் இறக்குமதி தொடர்பான பிரச்சனைக்கான தீர்வு**

- பயன்படுத்தப்பட்ட உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட பயன்படுத்தப்பட்ட பொருட்களின் இறக்குமதிகளை தடை செய்தல்.
- இறக்குமதிகள் மீது கண்டிப்பான நியமங்களை அமுல்படுத்தல்.

**முதலீட்டுச் சபை உற்பத்திப் பொருட்களை உள்ளூர் சந்தைக்கு வழங்கல் செய்வதனையும், முதலீட்டுச்சபை தொழிற்சாலைகளிலிருந்து பொருட்கள் முறையற்ற ரீதியில் சந்தைக்கு செல்வதனையும் தடுத்தல்.**

- நடைமுறையிலுள்ள சட்ட விதிகள், ஒழுங்கு விதிமுறைகள் என்பனவற்றை வலுப்படுத்தல்.
- முறைகேடுகளுக்கு அதிகபட்ச தண்டனை விதித்தல்.

**விலையை குறைத்து பட்டியலிடுதலையும், கள்ளக் கடத்தல்களையும் தடுத்தல்.**

- சுங்க ஒழுங்கு விதிமுறைகளை உரிய முறையிலும் கண்டிப்பாகவும் நிருவாகப்படுத்தி முறைகேடுகளுக்கு அதிகரித்த தண்டனை விதித்தல்.
- உத்தேசிக்கப்பட்ட ASYCUDA ++ மென்பொருள் முறைமையினை அமுல்படுத்தல்.

**சுங்கத்தில் இடம்பெறும் காலதாமதத்திற்கும் ஊழல் நடவடிக்கைகளுக்குமான தீர்வு**

- இலகுபடுத்தப்பட்ட நடைமுறைகளும் ஆவணப்படுத்தலும் மற்றும் நடைமுறைகளை மாற்றுவதற்கு முன்னர் போதிய முன்னறிவிப்பு செய்தலும்.
- ஊழலுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தல்.
- பொதுமக்களுடன் தொடர்புகளை கொண்டுள்ள திணைக்களங்களில் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நெருக்கமான சுற்றுவட்டத்திலுள்ள காட்சிகை படம்பிடித்து காட்டும் தொலைக்காட்சிகளை பல இடங்களில் நிறுவுதல் வேண்டும்.
- சுங்கத்தில் தொழிற்படும் அனைத்து பிரிவுகளும் 24 மணிநேரமும் பணியினை வழங்கச் செய்வதுடன் முறைமாற்று முறைமையினையும் அறிமுகப்படுத்தல்.
- ASYCUDA ++ மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இறைவரித் திணைக்களம், வங்கிகள், கப்பல்படுத்தல் கம்பனிகள், கப்பல்சரக்கு ஏற்றியிறக்கும் கம்பனிகள் என்பனவற்றை சுங்கத் திணைக்களத்துடன் மின்னியல் ரீதியாக ஒருங்கிணைத்தல்.
- சுங்கத்தில் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பெறுபேறுகளை எய்தக்கூடிய குழு ஒன்றினை நியமித்தல்.

**உற்பத்தி செலவிலும் குறைந்த விலையில் பொருட்கள் நாட்டிற்குள் ஏற்றுமதி செய்யப்படுவது தொடர்பான பிரச்சனைக்கான தீர்வு.**

- குறைந்த விலையில் பொருட்கள் நாட்டிற்குள் கொண்டு வரப்படுவதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான தீர்வைகளை விதித்தல்.

## சிறப்புக் குறிப்பு-6 (தொடர்ச்சி)

- குறைந்த செலவு கொண்ட தரம் குறைந்த இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு தீர்வை மற்றும் தீர்வையல்லா தடைகளை விதித்தல்.

**பதிவு செய்யப்படாத கைத்தொழில்களிலிருந்து எழும் போட்டிக்கான நிவாரணம்.**

- பதிவு செய்வதற்கு ஊக்குவிப்புக்களை வழங்கல்.
- கைத்தொழி முயற்சியாளர்களை பொருட் காட்சிகளுக்கு அழைப்பதன் மூலம் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

6. நிதி

**வட்டி அறவீடுகளை குறைத்தல்**

- அத்தியவாசியமற்ற மீண்டெழும் செலவுகளை குறைப்பதனூடாக அரசுக் கடன்பாடுகளை குறைத்தல்.
- வங்கிகளின் இடையீட்டு செலவை குறைப்பதனூடாக வட்டிவீத வேறுபாட்டை குறைத்தல்.
- தொழில்முயற்சி மூலதன வசதிகளை அளித்தல்.
- வெளிநிற்கும் படுகடன்களை மூலதனமாக நிலைமாற்றம் செய்தல்.

**காசோலை பணமின்றி திருப்பி அனுப்புதலுக்கான நடவடிக்கை**

- திருப்பியனுப்பப்படும் காசோலைகள் தொடர்பில் ஆளுகையை கொண்டுள்ள சட்டத்தை வலுப்படுத்தல்.

**அரச நிறுவனங்களுக்கு வழங்கல் செய்யப்பட்ட பொருட்கள் பணிகளுக்கான கொடுப்பனவுகளை மேம்படுத்தல்.**

- அரசாங்க கொடுப்பனவுகளை மேம்படுத்தல்.
- கொடுப்பனவு திகதிக்கு 2 மாதங்களின் பின்னர் கட்டாயமாக வட்டி தண்டப்பணம் விதித்தல்.

**வங்கிகளினால் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படல்/ தன்னிச்சையாக ஏலம்விடல்.**

- வங்கிகள் கடன் மதிப்பீடு மற்றும் செயற்றிட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தல்.
- கடன்பட்டியல்களை திறன்வாய்ந்த முறையில் கண்காணித்தல்.

அ வங்கிகளும், தொழிலதிபர்களும் இணக்க மொன்றுக்கு வரல்.

- பிணைகளை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கல்களிலிருந்து செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கலுக்கு அமைப்பு மாற்றம் செய்தல்.
- மீள ஒழுங்குபடுத்தலுக்கான பொறிமுறையொன்றை அரசாங்கம் நிறுவுதல்.
- ஐ.அ.நாடுகளின் க..ன் தீர்ப்பனவு தகைமையின்மை சட்டத் தொகுதியின் அத்தியாயங்கள் 7 மற்றும் 11இற்கு ஒத்த ஏற்பாடுகளை வர்த்தக அமைச்சு இலங்கைச் சட்டத்தில் அறிமுகப்படுத்தல் வேண்டும்.

7 **சந்தைகள்**

**போதிய அனுமதிப்பங்கு ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தல்.**

- அனுமதிப்பங்கு ஒதுக்கீட்டு முறையை மேம்படுத்தல்.
- சிறிய நடுத்தர கைத்தொழில் நிறுவனங்களுக்கான அனுமதிப்பங்கு ஒதுக்கீட்டை அதிகரித்தல்.
- அனுமதிப் பங்குகளற்ற சந்தைப்படுத்தலை நாடியறிந்து கொள்வதுடன் ஐக்கிய அமெரிக்க/ ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளில் வலுவான ஆதரவைத் தேடல் வேண்டும்.

**சந்தைகள் மற்றும் சிறப்பான சந்தைப்படுத்தல் தேவைப்பாடுகள் குறித்த அறிவினை மேம்படுத்தல்.**

- வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்கள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினூடாக தகவல்களை வழங்கல்.

**மந்தமடைந்த உலகப் பொருளாதாரம் தோற்றுவித்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணல்.**

- வெளிநாட்டுச் சந்தைகளில் பெருமளவு வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்றுமதி சென்றடையும் நாடுகளுடன் அரசாங்கம் இலங்கை, இந்திய கட்டுப்பாடுகளற்ற வர்த்தக உடன்படிக்கையை ஒத்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

8 **அரசாங்க கொள்கைகள்**

**திடீர் நெருக்கடிகள் தோற்றுவிக்கும் பிரச்சனை களுக்கான தீர்வு**

- கைத்தொழில் அமைச்சு இடையீட்டாளராகச் செயற்பட்டு நெருக்கடிக்கு தீர்வு காணல்.
- ஒவ்வொரு முக்கிய நிறுவனத்திலும் நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்கான குழு ஒன்றை அமைத்து

## சிறப்புக் குறிப்பு-6 (தொடர்ச்சி)

அவற்றின் தொடர்பு இலக்கங்களை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**அரசின் வருவாய் சேகரிப்பு முறையை இலகுபடுத்தல்.**

- பெருமளவு செம்மைப்படுத்தப்பட்ட வருவாய் சேகரிப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்தல்.
- குறிப்பாக செலவைக் குறைத்து வருவாயை அதிகரிப்பது தொடர்பில் தனியார் துறையின் கருத்துக்களை கேட்டறிதல்.
- வருவாயை அதிகரித்து செலவுகளை குறைக்கும் வகையில் துறைமுக அதிகாரசபை சட்டம், சுங்கக் கட்டளைச்சட்டம் என்பனவற்றை மீளாய்வு செய்தல்.
- சுங்கத்தின் வேலைசெய்யும் நேரத்தை விரிவுபடுத்தல்.

**முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச்சபை சாராத கைத்தொழில்களுக்கு இடையே காணப்படும் முரண்பாடுகளை நீக்குதல்.**

- முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச்சபை சாராத் கைத்தொழில்களுக்கான ஊக்குவிப்புக்களிடையே ஒத்திசைவை ஏற்படுத்தல்.
- முதலீட்டுச்சபை சாராத ஏற்றுமதியாளர்கள் முதலீட்டுச்சபை ஏற்றுமதியாளர்களைப் போன்று தீர்வையற்ற இறக்குமதிகளை செய்வதற்கு அனுமதித்தல்.

**அரச நிர்வாக சேவையினால் ஏற்படுத்தப்படும் தாமதங்களை குறைத்தல்.**

- ஒழுங்கு விதிமுறைகளை தளர்த்தல்.
- அரசாங்க நிறுவனங்கள் ஓரிடத்தில் பணியினை வழங்கல்.

**வர்த்தக கொள்கை வழிமுறைகளின் ஒருமைத்தன்மை.**

- திடீர் மாற்றங்களின்றி கொள்கைகளை முன்னறிவிப்புச் செய்தல்.
- அவ்வாறு அறிவிப்புச் செய்யப்பட்ட கொள்கைகளுக்கு இணங்கி ஒழுகுதல்.

**9. உட்கட்டமைப்பு**

**உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.**

- உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் தனியார்துறை முதலீட்டை ஊக்குவிப்பதற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறையினை அமுல்படுத்தல்.
- தனியார் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்திறனுடன் நடைமுறைப்படுத்தல்.
- வலு, நீர், போக்குவரத்து, துறைமுகப் பணிகள் என்பவற்றில் அமைப்புச் சீராக்கங்களை மேற்கொள்ளல்.

மேற்கூறப்பட்ட ஏதேனும் தீர்வு வழிமுறைகளை பிரயோகிப்பதன் மூலம் கைத்தொழில் அலகொன்றின் முறிவடைதலை தடுத்து நிறுத்த முடியாதளவிற்கு நலிவடைவின் பரிமாணம் கடுமைமிக்கதாக அமைந்து காணப்படுமாயின் மேலதிக நிதிகளை உட்பாய்ச்சல் செய்து அக் கைத்தொழில் அலகினை மீளஒழுங்குபடுத்தியமைப்பதனூடாக மாத்திரமே முறிவடைதலை தடுத்து நிறுவத்துவது சாத்தியமாகும். வர்த்தக ரீதியாக தொழில்படும் ஆற்றல்களற்ற அலகுகளுக்கு தொடர்ச்சியாக உதவியளித்து நிதிகளை உட்பாய்ச்சுவதானது நாட்டின் உற்பத்தியாக்கத்தினை பாதிக்கும் வகையில் பொருளாதார ரீதியில் உற்பத்தியாக்கம் நிறைந்த நோக்கங்களிலிருந்து அருமையாக கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதிகளை திசைதிருப்பிவிட வழிவகுக்குமாதலால் மீளஒழுங்குபடுத்தி அமைத்தலானது தனியே பொருளாதார ரீதியான காரணிகளை மாத்திரமே கருத்திற் கொண்டமைந்திருப்பதுடன் அரசியல் அல்லது வேறு ஏதேனும் காணிகளை அடிப்படையாகக் கொண்டமைதல் ஆகாது. தொழில்முயற்சி நிறுவனமொன்று வர்த்தக ரீதியாக நீண்டகாலம் செயல்படும் ஆற்றலற்றதென கருதப்படுமாயின் அரசுக்கும், சமுதாயத்துக்கும் அதிகரித்த செலவினை ஏற்படுத்தி அந் நிறுவனத்தின் ஆயுளை நீடிக்காது அதனை இயற்கையாக மரணிக்க அனுமதிக்க வேண்டும்.

எனவே ஆற்றல்மிக்க தொழில்முயற்சி நிறுவனங்களை மீளஒழுங்குபடுத்தி அமைப்பதற்கும், ஆற்றல்களற்ற தொழில்நிறுவனங்களை சுலபமாக ஒடுக்கிவிடுவதற்கும் வசதியளிக்கும் வகையில் முழுநிறைவான சட்ட மற்றும் நிறுவனரீதியான வரைச்சட்டமொன்றினை கொண்டிருத்தல் அவசியமாகும். எனினும் நலிவடைந்த கைத்தொழில் அலகுகளை மீண்டும் தொழில்படச் செய்வதற்கு காலத்திற்குக்காலம் அவ்வப்போதைக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இலங்கை குறிப்பாக நலிவடைந்த கைத்தொழில் அலகுகளின் மீளஒழுங்குபடுத்தி அமைப்பதற்கு உதவியளிப்பதற்கு அத்தியாவசியமான சட்ட மற்றும் நிறுவனரீதியான அமைப்பினைக் கொண்டிருக்கவில்லை. எனவே சாதாரண செலவில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள்

**சிறப்புக் குறிப்பு-6 (தொடர்ச்சி)**

நிதியியல் ரீதியில் ஆற்றல்மிக்கதாக மாற்றியமைக்கப்படக்கூடிய, நிதியியல் ரீதியில் பிரச்சனைகளுக்குள்ளாகியுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவு கைத்தொழில் அலகுகளின் முறையான மீளஒழுங்குபடுத்தலை வசதிப்படுத்துவதற்கு இந்திய நலிவுற்ற கைத்தொழில் கம்பனிகள் சட்டம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கடன் தீர்ப்பனவு தகைமையின்மை சட்டத்தொகுதியின் அத்தியாயம் II ஆகிய இரண்டினையும் ஒத்த அனைத்தையும் உள்ளடக்கிய கடன் தீர்ப்பனவு தகைமையின்மை மற்றும் மீளமைப்பு சட்டமொன்றை அத்தியவசியமான ஏற்பாடுகளுடன் இலங்கை அறிமுகப்படுத்த வேண்டுமென கருத்துக் கூறப்படுகின்றது.

கைத்தொழில்களின் துணைத்துறையொன்றை மட்டுமே உள்ளடக்கும். வேளாண்மைப் பதனிடல் மற்றும் சிறுகைத்தொழில்கள் ஆகிய தயாரிப்புத்துறையின் ஏனைய இரு துணைத்துறைகளின் வெளியீடும் வெவ்வேறாக மதிப்பீடு செய்யப்பட்டன.

2001ஆம் ஆண்டில் கைத்தொழில் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சியானது, தனியார்துறைக் கைத்தொழில்களில் ஏற்பட்ட 3.7 சதவீத வீழ்ச்சியினதும், அரசதுறைக் கைத்தொழில்களில் ஏற்பட்ட 11.3 சதவீத வீழ்ச்சியினதும் கூட்டு விளைவாகும். 2001இல் தொழிற்சாலைக் கைத்தொழில்களில் அரசதுறைக் கைத்தொழில்களின் பங்கு 5 சதவீதமாக இருந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியில் 14 சதவீதத்துக்கு வகைகூறிய வேளையில், தனியார் துறைக் கைத்தொழில்கள் எஞ்சியவற்றுக்கு வகைகூறின. 2001ஆம் ஆண்டில் கைத்தொழில் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி, புடைவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோலுற்பத்திகள் மற்றும் இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் ஆகிய இரு முக்கிய கைத்தொழில் வகைகளிலேயே அமைந்திருக்கக் காணப்பட்டது. இவ்விரு வகைகளும், 2001ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சியின் 100 சதவீதத்துக்கும் மேலாக வகை கூறியிருந்தன.

## தனியார் துறைக் கைத்தொழில்கள்

தனியார்துறைக் கைத்தொழில்களின் வெளியீடு, 2000ஆம் ஆண்டின் 10.5 சதவீத வளர்ச்சியுடனொப்பிடுகையில் 2001இல் 3.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தனியார்துறைக் கைத்தொழில்கள் 2001ஆம் ஆண்டின் கைத்தொழில் உற்பத்தியானது 95 சதவீதத்துக்கு வகைகூறியிருந்தன. 2000ஆம் ஆண்டின் 14 சதவீத வளர்ச்சியுடனொப்பிடுகையில், முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் வெளியீடு 2001ஆம் ஆண்டில் 7.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிக் கேள்வியில் பெருமளவான வீழ்ச்சியொன்றைப் பிரதிபலித்தன. முதலீட்டுச் சபையல்லாத் துறையிலான வெளியீடு முன்னைய ஆண்டின் 6.2 சதவீதத்துடனொப்பிடுகையில் 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. கைத்தொழில் துறையிலான இயலளவுப் பயன்பாட்டு வீதம், 2000ஆம் ஆண்டின் 85 சதவீதத்துடனொப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 80 சதவீதத்தால் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து, ஏற்றுமதி அடிப்படையிலான கைத்தொழில்களின் மெதுவான போக்கினைப் பிரதிபலித்தது. இக் குறைப்பானது, புடவை, அணியும் ஆடை மற்றும் தோலுற்பத்திகளிலும், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளிலும் மற்றும் தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகளிலும் முக்கியமாகப்பிரதிபலிக்கப்பட்டிருந்தன. கைத்தொழில் துறையிலான தொழில்வாய்ப்பு, 2001ஆம் ஆண்டில் சிறிதளவால் அதிகரித்தது.

## முக்கிய துறைகளின் செயலாற்றம்

### புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோலுற்பத்திகள்

தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டின் 45 சதவீதத்துக்கு வகைகூறிய புடவை, அணியும் ஆடை மற்றும் தோலுற்பத்திகளின் வெளியீடு 2000ஆம் ஆண்டின் 15.9 சதவீத வளர்ச்சியுடனொப்பிடுகையில் 2001இல் 8.5 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சி யடைந்தது. அணியும் ஆடை மற்றும் புடவை களுக்கான உலகளாவிய கேள்வி வீழ்ச்சியடைந்ததுடன் இருப்புக்கள், ஏற்றுமதிக் கட்டளைகளிலும் விலைகளிலும் கீழ்நோக்கிய போக்கொன்றை ஏற்படுத்தும் வகையில் கட்டியெழுப்பப்பட்டிருந்தன. மிகப்பெரும் தயாரிப்பாளர்களுக்கான துணை ஒப்பந்தங்களாக விளங்கி சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களே கட்டளைகளில் ஏற்பட்ட குறைப்புக்கு காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டவையாகும்.

வெளியீடு 8.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில், தோலுற்பத்திகள் 5.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. புடவை மற்றும் அணியும் ஆடைத்துறையிலான இயலளவுப் பயன்பாடு 2000ஆம் ஆண்டின் 88 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 76 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

ஆண்டின் முதலரைப்பகுதியில் உலகளாவிய பொருளாதாரத்தின் கீழ்நோக்கிய போக்கினால் வீழ்ச்சியடையத் தொடங்கிய ஐரோப்பிய சமூகம் மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளிலிருந்தான ஏற்றுமதிக் கட்டளைகள், ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கணிசமான அளவில் சுருக்கமடைந்தன. இவ்விரு சந்தைகளும் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட 90 சதவீதத்துக்கும் அதிகமான புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளுக்கான சந்தைகளாக விளங்கியிருந்தன. இந்நிலைமை, இச் சந்தைகளுக்கான ஏனைய வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்தான போட்டி, உலகில் முன்னுரிமை வர்த்தகத்தின் வளர்ச்சிப்போக்கு மற்றும் உலகளாவிய சந்தையில் குறைந்த உற்பத்திச் செலவினைக் கொண்ட ஏற்றுமதிகள் அதிகளவில் பிரவேசித்தமை ஆகியனவற்றால் மேலும் தீவிரமடைந்தது. பல ஐக்கிய அமெரிக்க இறக்குமதியாளர்கள், ஆசிய நாடுகளிலிருந்து வட அத்திலாந்திக் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஆடை ஏற்றுமதிகளில் தீர்வையற்ற நிலைமையின் வாயிலாக நன்மையைப் பெற்றுக்கொள்ளும் மெக்சிக்கோவுக்கு தமது கொள்வனவை மாற்றிக் கொண்டன. தற்போது ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான முதன்மை ஆடை வழங்குநராக மெக்சிக்கோ விளங்குகிறது. இதேபோல, கரிபியன் பிரதேசத்திலுள்ள நாடுகள் மற்றும் மிக அண்மையில் துணை சகாரா ஆபிரிக்க நாடுகள் ஆகியன ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளில் தீர்வையற்ற மற்றும் அளவுப் பங்கற்ற முறையில் நுழையக் கூடியதாயிருந்ததுடன், சந்தையில் ஆசிய நாடுகளின் பங்கையும் இதனால் குறைத்துக்கொண்டன. முன்கூறப்பட்டது போல, மேற்குச் சந்தைகளுக்கு கிழக்கைரோப்பிய நாடுகள் புவியியல் ரீதியில் அண்மையில் காணப்படுதல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் துருக்கி பிரவேசித்தமை ஆகியன ஐரோப்பிய ஒன்றியச் சந்தையில் ஆசிய ஆடை ஏற்றுமதிகளுக்கான போட்டியை அதிகரித்தன.

**அட்டவணை 4.2**
**தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(அ) | 2000 | 2001(அ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 172 | 188 | 193 | 205 | 211 | 6.1 | 3.1 |
| உணவு, ஏனையவை | 176 | 196 | 207 | 218 | 225 | 5.1 | 3.5 |
| வெறியக் குடிவகை | 177 | 207 | 199 | 203 | 208 | 2.1 | 2.4 |
| குடிபானம் | 207 | 226 | 221 | 248 | 259 | 12.1 | 4.7 |
| புகையிலை | 121 | 121 | 118 | 116 | 113 | -2.0 | -2.1 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 258 | 269 | 289 | 335 | 307 | 15.9 | -8.4 |
| அணியும் ஆடைகள் | 283 | 297 | 322 | 375 | 343 | 16.6 | -8.7 |
| புடவைகள் | 191 | 199 | 198 | 224 | 205 | 13.1 | -8.4 |
| தோல் | 193 | 196 | 203 | 217 | 205 | 7.1 | -5.6 |
| 3.மர, மர உற்பத்திகள் | 165 | 163 | 168 | 178 | 180 | 5.8 | 1.1 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 287 | 289 | 292 | 314 | 324 | 7.7 | 3.0 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 257 | 286 | 299 | 326 | 318 | 9.1 | -2.5 |
| இரசாயனம், தீந்தை, வளமாக்கி | 212 | 240 | 258 | 292 | 282 | 13.1 | -3.5 |
| இறப்பர் | 253 | 274 | 279 | 313 | 280 | 12.1 | -10.6 |
| பிளாத்திக்கு மற்றும் பிவிசி | 210 | 227 | 252 | 268 | 297 | 6.5 | 10.5 |
| மருந்தாக்கல் பொருட்கள், சுத்தமாக்கிகள், ஏனையவை | 265 | 297 | 312 | 331 | 319 | 6.0 | -3.5 |
| 6.உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 254 | 267 | 288 | 294 | 289 | 2.2 | -1.9 |
| வைரம் பதனிடல் | 260 | 237 | 274 | 281 | 274 | 2.5 | -2.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 189 | 195 | 199 | 201 | 177 | 1.2 | -11.9 |
| சீமெந்து | 232 | 276 | 285 | 287 | 294 | 0.8 | 2.5 |
| கட்டடப் பொருட்களும் ஏனையவையும் | 221 | 241 | 257 | 268 | 279 | 4.2 | 4.0 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 359 | 399 | 412 | 435 | 451 | 5.6 | 3.6 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 178 | 197 | 208 | 217 | 222 | 4.5 | 2.1 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 250 | 262 | 280 | 292 | 296 | 4.2 | 1.5 |
| அனைத்து வகைகளும் | 230 | 246 | 259 | 286 | 276 | 10.5 | -3.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

மேலே கூறப்பட்ட சாதகமற்ற அபிவிருத்திகள் ஐரோப்பிய ஒன்றியச்சந்தைகளில் நுகர்வோரினால் மேலும் வலுவூட்டப்பட்டு விலையைப் பற்றிய அக்கறையும் அதிகமாகக் காணப்படுவதனால், ஆசிய நாடுகளிலிருந்தான அணியும் ஆடை ஏற்றுமதியாளர்களிடமிருந்து இறக்குமதியாளர்கள் பெருமளவு கழிவுகளை வேண்டினர். உயர்வான பெறுமதி கூட்டப்பட்ட துணிகளின் பிரிவில், மலேசியா, தாய்வான், கொறியா, கொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் தென்ஆசிய நாடுகளுக்கான வலுவான போட்டியாளர்களாகத் தொடர்ந்தும் விளங்கின.

இவ்வறை கூவல்களை எதிர்கொள்வதற்கு, பல பெரும் தயாரிப்பாளர்கள் முன்னேற்றமடைந்த வடிவமைப்பு, விலை மற்றும் தரம் ஆகியவற்றினூடாக பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கை உற்பத்திகளுக்கு உயர்ந்த சந்தை வாய்ப்புத் தோற்றத்தினை உருவாக்குவதில் வெற்றிகண்டிருந்தனர். கட்டளைகளை மேற்கொள்ளல், உற்பத்தி அபிவிருத்தி, தரக்கட்டுப்பாடு சந்தைப்படுத்தல், வர்த்தக நிதியிடல் மற்றும் அளவுப் பொருத்தத்துக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது. இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றினால் வழிநடத்தப்பட்ட பன்னாட்டு வர்த்தகச் சந்தைகளில் முக்கியமான தயாரிப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தீவிரமாகப் பங்குபற்றினர். தகவல் தொழில்நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டமையானது சிறந்த முறையிலான சங்கிலித்தொடர் வழங்கல் முகாமை, புதிய மோஸ்தர் தொடர்பில் தகவலைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் விநியோக வலையமைப்பினை விருத்தி செய்தல் ஆகியவற்றுக்கு உதவியது.

அரசினாலும், ஐரோப்பிய சமூகத்தினாலும் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து, 2001ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியச் சந்தையில் அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்கச் சந்தைக்கான அனுமதிப் பங்கானது 6.7 சதவீதத்தால் அதிகரித்து 2001இல் 391.3 துண்டுகளாக விளங்கியது. கனடாவின் சந்தைக்கு உரித்துடைய அனுமதிப் பங்க 9.5 சதவீதத்தினால் அதிகரித்து 14.8 மில்லியன் துண்டுகளாக விளங்கியது. 2001இல் இலங்கை 47 வித்தியாசமான அணியும் ஆடை மற்றும் புடவை விடயங்களை இச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்திருந்தது. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சந்தையில் அனுமதிப் பங்குகளின் பயன்பாடு 7.5 சதவீதத்தினால் 2000ஆம் ஆண்டின் 308.8 மில்லியன் துண்டுகளிலிருந்து 2001இல் 285.6 மில்லியன் துண்டுகளுக்கு வீழ்ச்சியடைந்தது. அனுமதிப்பங்குப் பயன்பாட்டு வீதத்தினை 84.2 சதவீதத்திலிருந்து 73 சதவீதத்துக்குக் குறைத்தது. அணியும் ஆடையின் பயன்பாட்டு வீதம் 2000ஆம் ஆண்டின் 88.8 சதவீதத்திலிருந்து 80.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் சீத்தைத் துணிகளின் பயன்பாட்டு வீதம் 2000ஆம் ஆண்டின் 28.5 சதவீதத்திலிருந்து 2001இல் 13.9 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், 2001ஆம் ஆண்டில் அனுமதிப்பங்குப் பயன்பாட்டு வீதமானது 8 அனுமதிப்பங்கு விடயங்களைப் பொறுத்தமட்டில் 90 சதவீதத்துக்கு மேலாகக் காணப்பட்டது. பின்னப்பட்ட ஆண் பெண் மேலங்கிகள், குளிராடைகள், நீண்ட காற்சட்டைகள் மற்றும் உள்ளாடை போன்ற அனுமதிப்பங்கு விடயங்கள் இவ்வாண்டில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. விளையாட்டு உடைகள், சீத்தைகள், தலையணை உறைகள் ஆகிய உற்பத்திகளுக்கான கட்டளைகளைப் பெறுவதில் கூடிய போட்டி காணப்படுவதனால் இவ்வனுமதிப் பங்கு விடயங்களின் பயன்பாட்டு வீதம் 25 சதவீதத்துக்குக் குறைவாகக் காணப்பட்டன. கனடாவின் சந்தையில் பயன்பாட்டு வீதம் 2000ஆம் ஆண்டின் 43.4 சதவீதத்திலிருந்து 2001இல் 42.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. கனடாவின் சந்தையில் மிகவும் பிரபலமான அனுமதிப்பங்கு விடயங்களாக குளிர்கால வெளிஆடைகள், நீண்ட காற்சட்டைகள், மேலங்கிகள் மற்றும் கட்டைக் காற்சட்டைகள், ஆண்களின் மேலங்கிகள், பெண்களின் மேலங்கிகள், குழந்தைகளின் ஆடைகள் ஆகியன காணப்பட்டன.

ஆடைக் கைத்தொழில் கேள்வியின் அதிகரிப்பும் மோஸ்தரும் அண்மைக் காலங்களில் குறிப்பிடத் தக்களவில் மாற்றமடைந்துள்ளன. நிதானமான வாழ்க்கை முறையொன்றில் ஏற்பட்ட நாட்டமானது மோஸ்தர் கைத்தொழிலில் வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி, கட்டமைக்கப்பட்ட உடை அமைப்பிலிருந்து சாதாரண விடயங்களை நோக்கி மாற்றமடைந்தது. தளர்ச்சியான அலுவலக உடைகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டமையானது சாதாரண ஆடைகளுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்தது. ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளிலுள்ள பல கம்பனிகள் "சாதாரண வெள்ளிக்கிழமைகள்" அல்லது "ஏதேனும் ஆடை அணியும் வெள்ளிக கிழமைகள்" நடைமுறைகளைத் தற்போது கைக்கொள்வதுடன் ஊழியர்களை முறைசாரா ஆடைகள் அணிவதற்கும் அனுமதித்தன. "வர்த்தகரீதியான சாதாரண ஆடைகள்" மீது அண்மைக் காலத்தில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமையானது தடித்த மேலங்கிகள், தளர்வான மேலங்கிகள் பின்னப்பட்ட மேலங்கிகள் இரட்டை உடுப்புக்கள், காக்கித் துணிகள், பாவாடைகள் ஆகியவற்றுக்கான அதிகரித்த கேள்வியை விளைவித்தன. இலங்கையில் சில முக்கிய தயாரிப்பாளர்கள் இவ்வுற்பத்திகளை வழங்குவதற்காக தமது உற்பத்திச் செய்முறையை மாற்றிக் கொண்டனர்.

உலகளாவிய சந்தையில் காணப்படும் இத்தகைய மாற்றமடையும் சூழலின் காரணமாக, இலங்கை மேற்குநாடுகளில் தனிச்சந்தைகளில் தனது சந்தைப்பங்கினை அதிகரிக்க வேண்டியிருப்பதுடன் அவற்றின் மோஸ்தர்களுடனும் இணைந்திருக்க வேண்டும். உயர் பெறுமதி கூட்டப்பட்ட விடயங்களுக்கு இவை மாற்றமடைவதுடன் தனிச்சந்தைகளில் கேள்வியை கைப்பற்றிக் கொள்வதற்கு வாடிக்கையாளர் பிரிவுகள் நவீன உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகியவற்றின் மீது அதிக கவனம் செலுத்தப்படவும் வேண்டும். குழந்தைகளுக்கான துணிவகைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கான துணி வகைகளுக்கு சந்தைப் பிரிவுகளில் உயர்வான வாய்ப்புக் காணப்படுவதற்கு, பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூடிய விலை வீச்சில் அவற்றை அடிக்கடி வாங்குவதே காரணமாகும். இவ்விடயங்களுக்கான நுகர்வோரைக் கவரும் விதத்தில் நவீன வடிவங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நற்பெயரைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் மற்றம் கடுமையாக ஆதரவு திரட்டுதல் ஆகியன அதிக ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெறுவதற்கு அவசியமானவையாகும். துணிகளைத் தேர்ந்தெடுத்தல், விநியோகப் பரம்பல் மற்றும் போட்டித்தன்மையுடை விலைகள் ஆகியனவும் வெளிநாட்டுக் கேள்வியைக் கவருவதில் முக்கியமான பங்கை வகிக்கின்றன.

இலங்கையின் ஆடைக் கைத்தொழிலின் போட்டித்தன்மையைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக குறைந்த உழைப்பு உற்பத்தியாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்பம் போதியளவில் பயன்படுத்தப்படாமை ஆகியன விளங்குகின்றன. இலங்கையானது குறைந்த உழைப்புச் செலவினால் மட்டும் போட்டிபோட முடியாதென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கைத்தொழிலில் மொத்தக் காரணி உற்பத்தியாக்கத்தினை முன்னேற்றுவதற்கே அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். ஆடைத்துறையின் உற்பத்தியாக்கத்திலான முன்னேற்றமானது, போக்குவரத்து வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் குறைவாகக் காணப்பட்டமையினால் தொழிற்சாலை அலுவல்கள் கடமைக்குச் சமூகமளிக்காமை, போதிய பயிற்சி வழங்கப்படாமை, அடிக்கடி மின்வலு துண்டிக்கப்படுதல் மற்றும் எந்திரங்கள் பழுதுபட்டுப் போதல் போன்ற பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டிருந்தன.

## உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள்

உணவு, குடிபானம் மற்றும் புகையிலை வகையின் வெளியீடு, 2000ஆம் ஆண்டின் 6.1 சதவீதத்துடனொப்பிடுகையில், 2001ஆம் ஆண்டில் 3.1 சதவீதத்தால் மிதமாக வளர்ச்சியடைந்தது. அதிகரித்த உற்பத்தி, உணவு பதனிடல் (3.5 சதவீதம்), குடிபானங்கள் (4.7 சதவீதம்), மற்றும் குடிவகை (2.4 சதவீதம்) ஆகிய முக்கிய துணைத்துறைகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. புகையிலை துணைத்துறையிலான வெளியீடு 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இப்பிரிவினது மிதமான வளர்ச்சி, பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவான போக்கின் காரணமாக நுகர்வோர் கேள்வியில் ஏற்பட்ட தளர்வினாலேயே முக்கியமாக ஏற்பட்டதாகும். எனினும், விற்பனைகளில் குறைப்பு ஏற்பட்ட நிலையிலும், பல தயாரிப்பாளர்கள், முன்னேற்றமடையும் விநியோகமுறைகள், புதிய முறையிலான விற்பனை ஊக்குவிப்புக்கள் மற்றும் உற்பத்தித் தரத்தை முன்னேற்றுதல் ஆகியவற்றில் உற்பத்தி, தரக்கட்டுப்பாடு மற்றும் பொதியிலடைத்தல் ஆகியவற்றில் முன்னேற்றமடைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொடர்ந்தும் முதலீடு செய்தனர்.

உணவுத் துணைத்துறையினர் பாலுற்பத்திகள், கோதுமைமா பதனிடல், பதனிடப்பட்ட இறைச்சி உற்பத்திகள், உணவு பதனிடல் மற்றும் விலங்குத்தீன் ஆகியவற்றிலேற்பட்ட உயர்வான அதிகரிப்பின் காரணமாக 2001ஆம் ஆண்டில் அதிகரித்ததுக் காணப்பட்டது. ஆண்டின் பின்னரைப்பகுதியில் கேள்வியில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியின் காரணமாக இறைச்சி பதனிடல் கைத்தொழில் 2001இல் 2.5 சதவீதமான மிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. இறைச்சி பதனிடும் கைத்தொழில் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கஷ்டமான நிலைமையைக் கொண்டிருந்தமைக்கு சுற்றுலாக் கைத்தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கேள்வியில் கடுமையான குறைப்பு ஏற்பட்டமை மற்றும் உள்நாட்டு நுகர்வோர் கேள்வியில் ஏற்பட்ட குறைப்பு ஆகியனவே காரணமாகும். மூன்றாம் காலாண்டில் நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் வரையில் காணப்பட்ட மின்வெட்டுக்கள் களஞ்சியப்படுத்தல் பிரச்சனைகளின் வாயிலாக கைத்தொழில் வளர்ச்சியைத் தடைசெய்திருந்தன.

எனினும், இறைச்சி பதனிடும் கைத்தொழிலில் ஆகக்குறைந்த மனிதத் தலையீட்டுடன் உயர்ந்த உற்பத்தியாக்கத்தை அடைவதற்காக பெரும் தொழிற்சாலைகள் தன்னியக்கப்படுத்தப்பட்டு சுகாதாரமுறை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களையும் பெற்றிருந்தன. இக் கைத்தொழிலில் புதிதாக உற்பத்தியைத் தொடங்குதலானது, முன்னேற்றமடைந்த தொடர்பூட்டல்கள், பொதியிலடைத்தல் மற்றும் உற்பத்தி தொடங்குதலில் ஏற்படும் தடை தொடர்பான இடரினைக் குறைப்பதற்காக நாளது வரையிலான தரப்பரிசோதனை முறைகளை மேற்கொள்ளல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது.

பாலுற்பத்திகளின் பன்னாட்டு விலைகள், பரவலாகக் காணப்பட்ட பாதம் மற்றும் வாய்

## அட்டவணை 4.3
## கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (அ)

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) | 2000 | 2001(ஆ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 75,713 | 86,994 | 94,687 | 105,671 | 120,359 | 11.6 | 13.9 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 156,500 | 175,443 | 188,844 | 227,746 | 224,898 | 20.6 | 4.3 |
| 3.மர, மர உற்பத்திகள் | 2,299 | 2,511 | 2,715 | 3,084 | 3,272 | 13.6 | 6.1 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 5,462 | 5,593 | 5,854 | 6,516 | 7,369 | 11.3 | 13.1 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 50,682 | 59,724 | 62,590 | 74,670 | 78,553 | 19.3 | 5.2 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 21,403 | 23,830 | 26,830 | 28,198 | 31,892 | 5.1 | 13.1 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,439 | 2,841 | 3,046 | 3,378 | 3,888 | 10.9 | 15.1 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 11,327 | 13,241 | 14,305 | 15,678 | 17,638 | 9.6 | 12.5 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 7,324 | 8,137 | 9,002 | 9,839 | 10,361 | 9.3 | 5.3 |
| மொத்தம் | 333,149 | 378,314 | 407,873 | 474,780 | 498,230 | 16.3 | 7.7 |

(அ) உற்பத்திகளின் பெறுமதி, உற்பத்திகளின் தொழிற்சாலைப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

நோய்களின் விளைவாக ஏற்பட்ட உலகளாவிய வழங்கல் குறைபாடுகள் காரணமாக 2001இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இதன் விளைவாக, பால்மாவின் உள்நாட்டு விலை இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு, நாடு இறக்குமதிகளில் பெருமளவிற்குத் தங்கியிருக்கின்றமையே காரணமாகும். இவ் விலையதிகரிப்புக்கள் காணப்பட்ட போதிலும் பால்மா பதனிடும் கைத்தொழில் 2001இல் சார்புரீதியில் உயர்வான வளர்ச்சியொன்றைப் பதிவு செய்திருந்தது. உள்நாட்டுப் பால்மா தயாரிப்புக் கைத்தொழிலுக்கு உடன்பாலின் கிடைப்பனவு அதிகரித்தமையினால் 9.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட பாற்பண்ணை உற்பத்திகளின் அதிகரித்த விலைகளின் நோக்கில், தோட்ட கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு, வேளாண்மைக் காப்புறுதிச் சபையுடன் இணைந்து நாட்டில் பாற்பண்ணை உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்திருந்தது.


கால்நடை உணவுக் கைத்தொழிலுற்பத்தியானது, கோழிப் பண்ணைக் கைத்தொழில் வளர்ச்சியடைந்து செல்வதன் காரணமாக தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. மாவை அடிப்படையாகக் கொண்ட உணவு பதனிடல் கைத்தொழிலில் காணப்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் உணவுப் பழக்கங்களில் குறிப்பாக நகரப்பகுதிகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகியன கோதுமை மாவுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்தன. 2001ஆம் ஆண்டில் கோதுமை மற்றும் கோதுமைமா இறக்குமதிகளைத் தாராளமயமாக்கியமை, புதிய மா பதனிடும் பொறியொன்றை நிறுவுதல் மற்றும் தற்போதுள்ள பதனிடும் பொறியை விரிவாக்குதல் ஆகியவற்றுக்கு வழியமைத்துக் கொடுத்திருந்தது. விசுக்கோத்தின் வெளியீடு 2001இல் 3.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெரும் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தொழிலாளர் அமைதியின்மையே காரணமாகும். எனினும், சில தயாரிப்பாளர்கள், 2001இல் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் புதிய உற்பத்திகளை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியிருந்தனர். பதனிடப்பட்ட தேயிலை மற்றும் பழம் பதனிடல் ஆகியவற்றிலான அதிகரித்த உற்பத்தியினால், குடிபானத்துறை 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தீவிரமான விளம்பர நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்த விநியோக முறைகள் மற்றும் நாட்டின் பல பாகங்களில் நிலவிய வரட்சியான காலநிலை ஆகியவற்றுக்கு மத்தியிலும் மென்பானக் கைத்தொழிலின் வெளியீடு 4.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

குடிவகையின் வெளியீடு 2001ஆம் ஆண்டில் 2.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து பியரின் வெளியீட்டில் ஏற்பட்ட விரிவினைப் பிரதிபலித்தது. முக்கியமான பியர் தயாரிப்பாளர்கள் யப்பான், ஐக்கிய இராச்சியம், மாலைதீவு மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். இவ்வாண்டில் விரிவடைந்த சந்தை ஆராய்ச்சி பொதியிடல், வெளிநாடுகளில் விநியோக வலையமைப்புக்களை நிறுவுதல், ஊக்குவித்தல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வெறியக் குடிவகைக் கைத்தொழிலின் வெளியீடு விலைகளிலேற்பட்ட



17 MAY
LIBRARY

வரைபடம் 4.3
தனியார்துறை கைத்தொழில் உற்பத்தி அளவுச் சுட்டெண்
( 1997 = 100 )




மேல்நோக்கிய திருத்தத்தினைத் தொடர்ந்து 2001இல் சிறிதளவான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இது சட்டரீதியற்ற குடிவகையின் தொடர்பான விலைகளையும் அதிகரித்தது. வெறியக் குடிவகைக் கைத்தொழிலில், புதிய போத்தல்கள், அடையாளச் சீட்டுக்கள் மற்றும் மேல் முடிகள் ஆகியவற்றின் அறிமுகமானது முன்னணித் தயாரிப்பாளர்களினால் தயாரிக்கப்பட்ட சட்டரீதியற்ற போலி உற்பத்திகளை வெற்றிகரமாக மறுதலிக்கக் கூடியதாயிருந்தது. சிகரெட்டின் வெளியீடு வீழ்ச்சியடைந்தமைக்கு, சட்டரீதியற்ற சிகரெட்டு உற்பத்தியில் காணப்பட்ட விரிவு மற்றும் புகையிலையோடு தொடர்பான நலப்பிரச்சனைகள் தொடர்பாக பெருமளவு தெரிநிலையின் விளைவாக ஏற்பட்ட மந்தமடைந்த கேள்வி ஆகியனவே காரணமாகும்.

## இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்

இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் பிரிவு 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகள், மருந்தாக்கல்கள், சவர்க்காரம் மற்றும் அழுக்கி நீக்கிகள் வேளாண்மை-இரசாயனங்கள் மற்றும் வளமாக்கி ஆகியவற்றில் குறைவான வெளியீட்டினைப் பிரதிபலித்தன. உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்பட்ட வீழ்ச்சியினால் இறப்பர் அடிப்படையிலான கைத்தொழிலின் வெளியீடு 2001இல் 10.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இறப்பர் அடிப்படையிலான கைத்தொழிலின் உற்பத்திச் செலவு 2001இல் கணிசமான அளவில் அதிகரித்தது. லேற்றெக்ஸ், வலு மற்றும் ஏனைய இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளில் செலவு அதிகரிப்புக்கள் உயர்வாகக் காணப்பட்டிருந்தன. எனினும், ரூபாவின் இப் பெறுமானத் தேய்வானது தென்கிழக்கு ஆசியாவின் போட்டியாளர்களிடமிருந்தான அழுத்தத்தை எதிர்கொள்ளுவதில் ஓரளவு நிவாரணத்தை வழங்கி செலவு அதிகரிப்பின் தாக்கத்தை மெதுமைப்படுத்தியது. தயாரிப்பாளர்களினால் கைக்கொள்ளப்பட்ட உபாயங்கள், 2001இல் எதிர்பார்க்கப்பட்ட மெதுவான வளர்ச்சியினால் ஏற்படுத்தப்பட்ட அறைகூவல்களைச் சந்திப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாகக் காணப்பட்டதுடன் எதிர்மறைவான விளைவுகளை குறிப்பிட்ட அளவுக்கு மறுதலிப்பதற்கும் உதவின. இவ்வுபாயங்கள், உற்பத்தி வீச்சினை உயர்பெறுமதி கூட்டப்பட்ட விடயங்களுக்கும் விரிவாக்குதல், பன்னாட்டுத் தரங்களுக்கு உற்பத்தித் தரத்தை முன்னேற்றுதல், உற்பத்திச் செய்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை கணனி மயமாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கின. பிரதேசத்தின் சிறந்த செலவுப் பயன்பாட்டுத் தயாரிப்பாளர்களாக வருவதற்கு தயாரிப்பாளர்கள் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டன. மருத்துவமல்லா இறப்பர் கையுறைகளைத் தயாரிக்கும் பெரிய தயாரிப்பாளர் ஒருவர் ஜெனிவாவிலமைந்துள்ள நுண் ஆய்வு பரிசோதனை மற்றும் சரிபார்ப்பில் உலக முன்னணி நிறுவனமான சொசைட்டி ஜெனரல் 4 செவிலியன் இடமிருந்து பரிசோதனை மற்றும் சரிபார்ப்பு சான்றிதழொன்றைப் பெற்றிருக்கிறார். இது, உற்பத்தித்தரம், செய்முறைக் கட்டுப்பாடுகள், தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சூழல் நடைமுறைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற பன்னாட்டு ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களை நிரம்பலர் உறுதிப்படுத்துவது பற்றி சில்லறை விற்பனையாளர்களுக்கு உத்தரவாதமளிக்கின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலும் பார்க்க விலை அனுகூலங்கள் காணப்பட்டபோதும் 2001இல் மருந்தாக்கல் கைத்தொழிலின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது. இருபாரிய மருந்தாக்கல் தயாரிப்பு நிறுவனங்கள் பரஸ்பர நன்மைகளுக்காக 2001இல் இணைக்கப்பட்டன. இவ்விணைப்பு குழு அமைப்பிலான ஆராய்ச்சி மற்றும் மூலவள அபிவிருத்தி, விற்பனை ஊக்குவிப்புச் செலவுகளில் குறைப்பு, சந்தையில் போட்டி விலைகளில் குறைப்பு என்பனவற்றை உள்ளடக்கிய பல அனுகூலங்களைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்பட்டது. சவர்க்காரம் மற்றும் அழுக்கு நீக்கிக் கைத்தொழில்களின் வெளியீடு 2001இல் வீழ்ச்சியடைந்தமைக்கு மந்தமான சந்தை நிலைமைகளே காரணமாகும். நுகர்வோர் கேள்வியை ஊக்குவிக்கும் பொருட்டு தயாரிப்பாளர்கள் பல உத்திகளைப் பின்பற்றினர். இவை சந்தைக் கூறாக்கல்கள், கழிவுகள் மற்றும் அதிகளவிலான விளம்பரங்களினூடான ஊக்குவிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. கழிவு நீக்கிகளின் சில தயாரிப்பாளர்கள் சந்தையில் கூறுகளிலிருந்து நன்மைகளைப் பெற்றனர். தாழ்ந்த வருமானம் பெறும் நுகர்வோரை இலக்காகக் கொண்டு சிறப்பு விலைகளுடன் கூடிய பற்பசை, சம்பூ மற்றும் நறுமணப் பொருட்கள் சிறிய பொதிகளில் சந்தைக்கு

நிரம்பல் செய்யப்பட்டன. 2001இல் சவர்க்கார தயாரிப்பு கைத்தொழிலுள்ள பெரிய நிறுவனமொன்று முதற்தடவையாக சவர்க்காரத் துண்டுகள் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலுடன் இந்தியாவின் நிர்ணய தீர்வை வீதத்தில் 50 சதவீதத்தினை மட்டுமே இறக்குமதியாளர்கள் செலுத்த வேண்டியிருந்தமையினால் இந்தியாவிற்கான சவர்க்காரத் துண்டுகளின் போட்டிமூலமாக இலங்கை மாற்றமடைந்தது. உள்நாட்டுச் சந்தையில் மூலிகைச் சாம்பூ, சவர்க்காரம், மற்றும் நறுமணத்திரவம் மற்றும் களிம்பு என்பன நுகர்வோரிடையே பிரபல்யம் பெற்றுவருகின்றன.

2001இல் இரசாயனம் மற்றும் வளமாக்கித் துணைத்துறையில் செயற்படுகரியம், வளமாக்கி, களைக்கொல்லிகள் மற்றும் பூச்சி கொல்லிகள் என்பனவற்றின் வெளியீடு வீழ்ச்சியடைந்தவேளையில் நுளம்புச்சுருள் மற்றும் இரசாயனங்களின் வெளியீடு மிதமாக வளர்ச்சியடைந்தது. 2001இல் செயற்படுகரியக் கைத்தொழிலின் வெளியீடு வீழ்ச்சியடைந்து ஏற்றுமதிக் கேள்வியில் ஏற்பட்ட குறைப்பினையும் பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட போட்டித்தன்மையினையும் பிரதிபலித்தது. சமையல் எண்ணெய் இறக்குமதிகள் மீதான உயர்ந்த தீர்வைகளினூடாக உலர்த்திய தேங்காய்க்கும், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கும் வழங்கப்பட்ட இறைப் பாதுகாப்பின் காரணமாக பெருமளவு தேங்காய்த்துருவல் கைத்தொழில்களிலிருந்து இக் கைத்தொழில்களின் பயன்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டமை செயற்படுகரிய கைத்தொழிலுக்கான தேங்காய்ச் சிரட்டையின் கிடைப்பனவைக் குறைத்தது. வரட்சியின் காரணமாக தேங்காய் உற்பத்தி குறைவடைந்தமையானது கைத்தொழிலை மிக மோசமாகப் பாதித்தது. பன்னாட்டுச் சந்தையில் பிலிப்பைன்சும் இந்தியாவும் செயற்படுகரியத்தின் மிகுந்த போட்டிக்குரிய உற்பத்தியாளர்களாக மாறிவருகின்றன. எனினும், நீராவியை உருவாக்குவதற்கு கழிவு வெப்ப மூட்டிகளை மீளப் பயன்படுத்துவதில் தொடர்ந்தும் முன்னேற்றங்களைக் கண்டமையின் மூலம் இக் கைத்தொழில் வலுச் செலவுகளை குறிப்பிடத்தக்களவிற்கு சேமிக்கக் கூடியதாக இருந்தது. ரூபாவின் பெறுமதித்தேய்வும் ஓரளவு நிவாரணத்தைத் தந்தது.

நுகர்வோர் செலவிடல் நலிவுற்றுக் காணப்பட்ட போதும், பிளாத்திக்கு கைத்தொழில் 10.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து பிளாத்திக்கு தளபாடம், வீட்டுஉபயோகப் பொருட்கள், கட்டிடவாக்க மற்றும் பொதியிடல் பொருட்களில் உயர்ந்த வெளியீட்டினைக் காட்டியது. மர உற்பத்திகளுக்கான பதிலீடாக பிளாத்திக்கு உற்பத்திகளைப் பயன்படுத்துவது பிளாத்திக்கு உற்பத்திகளின் விலை அனுகூலம் காரணமாக தொடர்ந்தும் காணப்பட்டது. பிளாத்திக்கு தளபாடங்களின் முக்கிய தயாரிப்பாளர்கள் மரபொருள்களின் இறுதிவடிவமளவிற்கு பிளாத்திக்கு தளபாடங்களுக்கும் அழகூட்டி வர்ணம் தீட்டுவதனை அறிமுகப்படுத்தியதன் மூலமாக மரப்பொருட்களின் நேர்த்தியைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதிகளவிலான விளம்பரங்களும் நுகர்வோரை பிளாத்திக்குத் தளபாடங்களின் பால் கவர்கின்றன.

## உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள்

மட்பாண்டம், கண்ணாடி மற்றும் வைரம் செப்பனிடல் என்பனவற்றின் குறைந்த வெளியீடு காரணமாக உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு 0.5 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. 2001இல் சீமெந்து கலவை உற்பத்திகள், கல்நார்த்தகடுகள் மற்றும் சீமெந்து என்பன கட்டுமானக் கைத்தொழிலில் ஏற்பட்ட மிதமான விரிவாக்கத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட அதிகரித்த போட்டியின் காரணமாக மட்பாண்டக் கைத்தொழில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டது. சீனாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தொழிற்சாலைகள் விரிவடைந்தமையின் காரணமாக உலகச்சந்தையில் மட்பாண்டங்களின் உற்பத்திகள் குறிப்பிடத்தக்களவிற்கு மிகைநிரம்பல் செய்யப்பட்டிருந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிற்சாலைகள் ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் போட்டிரீதியான அனுகூலங்கைளப் பெற்றிருந்தமைக்கு குறைந்த தீர்வை வீதங்கள், புவியியல் ரீதியாக அருகிலிருக்கும் தன்மை மற்றும் குறுகிய காலத்தூரம் என்பன காரணங்களாயமைந்தன. ஐக்கிய அமெரிக்கச் சந்தையில், குடியிருப்பாளர்கள், பராம்பரிய உயர்தரப் பொருள்களுக்குப் பதிலாக மிகச் சாதாரணமான "கண்ணாடியிலான பொருட்களுக்கு" முன்னுரிமையளிக்கும் புதிய போக்கொன்று காணப்படுகின்றது. இப்போக்கு இலங்கையில் தங்கத்தினாலும், வெள்ளியினாலும் அலங்கரிக்கப்பட்ட உயர்தர பொருட்களின் தயாரிப்புக்களின் மீது அழுத்தத்தினைத் தோற்றுவித்துள்ளது. மாற்றமடைந்துவரும் சந்தைச் சூழலுக்கேற்ப சீனத் தயாரிப்பாளர்கள் குறைந்த விலைகளில் சாதாரண உற்பத்திகளை வழங்கக்கூடிய இயலாற்றலைக் கொண்டுள்ளமையினால் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாயிருந்தனர். மின்வலு, டீசல், வாயு, இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் தொழிலாளர் செலவு என்பனவற்றில் ஏற்பட்ட உயர்வு போட்டித்தன்மையினைக் குறைத்துவிட்ட தெனினும்

ரூபாவின் தேய்மானம் கைத்தொழிலுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உதவியது. ஏற்றுமதிப் போட்டித்தன்மையினை மீண்டும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, முக்கியமான மட்பாண்டக் கைத்தொழில்கள் புதிய சந்தைகளில் நுழைவதன் மூலம் செலவினைக் குறைப்பதன் மீதும் மிகக்கூடியளவு கவனத்தினைச் செலுத்தின. சில தயாரிப்பாளர்கள் நன்மதிப்புக்களைக் கட்டியெழுப்பும் பிரச்சனைகள், சந்தைப்படுத்தல் தொடர்புகளை மேம்படுத்தல், துணை வியாபாரப் பொருட்களை அறிமுகப்படுத்தல் மற்றும் விற்பனையை ஊக்குவிக்கும் ஏனைய வழிவகைகளினூடாக உள்நாட்டுச் சந்தையில் விற்பனைகளை விரிவாக்கிக் கொண்டனர். மேம்பாட்டு வழிமுறைகளின் ஒருபகுதியாக தயாரிப்பாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு ஓடுகளையும் அரைசாந்துப் பொருட்களையும் தெரிவுசெய்தல் தரையினை ஒழுங்குபடுத்தல் மற்றும் அதன் மீது ஓடுகளைப் பதித்தல் என்பன தொடர்பாக அறிவூட்டும் பொருட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல செயலமர்வுகளையும், ஆய்வரங்குகளையும் நடத்தினர்.

2001இல் கண்ணாடிக் கைத்தொழிலின் வெளியீடு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உயர்ந்த வலுச்செறிவுக் கைத்தொழிலான கண்ணாடிக் கைத்தொழில், வலு விலைகளின் திடீர் உயர்வினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ரூபாவின் தேய்வு காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பதிலீட்டு உற்பத்திகளின் விலைகளும் அதிகரித்தமையினால் இச்செலவு அதிகரிப்புக்களில் சில பகுதிகளை நுகர்வோர் மீதும் சுமத்தக்கூடியதாக இருந்தது. இக் கைத்தொழிலிலுள்ள முக்கிய தயாரிப்பாளர்கள் முடிவுப்பொருட்களின் நிறத்தினை மாற்றுவதற்காகப் புதிய தொழில்நுட்பத்தில் முதலீடுகளை மேற்கொண்டனர். இது, உலையில் நிறங்களை மாற்றாமலேயே நிறமூட்டிய போத்தல்களைத் தயாரிப்பதற்கு தயாரிப்பாளர்களை இயலச்செய்தது.

சீமெந்துக் கைத்தொழிலின் வெளியீடு சிறிதளவு வளர்ச்சியை மட்டும் பதிவுசெய்தமைக்கு தொகை வடிவிலான சீமெந்தின் மீதான தீர்வை 10 சதவீதத்திற்கும் சீமெந்துப் பைகள் மீதான தீர்வை 15 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டமையினைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்திலிருந்து எழுந்த போட்டியே காரணமாகும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்து மீதான தீர்வை 9.5 சதவீதமாக இருந்தது.

## உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்

2001இல் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் வெளியீடு 2.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. முதலீட்டுச்சபைக் கைத்தொழில்களின் மின்னியல் பாகங்கள், கணனிப் பாகங்கள், மின்கடத்திகள் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்திகளே காரணமாகும். முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்களின் தயாரிப்புக்களான கம்பிவயர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொருத்துதல் மற்றும் தயாரித்தல், அலுமினிய உற்பத்திகள், மின்விளக்குப் பொருத்திகள், உலோக உற்பத்திகள், கம்பிவகைகள், வேலிகள் அமைப்பதற்கான சங்கிலிகள், காப்பிடப்பட்ட ரியூப்புக்கள், சிறிய கொள்கலன்கள் வீட்டிற்கான நீர்ப்பம்பிகள் மற்றும் கப்பல்களைத் திருத்துதல் மற்றும் தயாரித்தல் என்பன 2001இல் உயர்மட்ட வெளியீடுகளைப் பதிவுசெய்தன. எனினும் மின்கலங்கள், மின் மற்றும் வேளாண்மைப் பொறிகள், மின்குமிழ்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பேரூந்துகளின் உடல் உருவமைப்புக்கள் என்பனவற்றின் வெளியீடுகள் வீழ்ச்சியடைந்தன.

அரசிடமிருந்தும் அயல்நாடுகளிடமிருந்தும் கிடைத்த புதிய கட்டளைகளின் காரணமாக 2001இல் கப்பல்கட்டல் மற்றும் திருத்தல்களின் வெளியீடு அதிகரித்தது. கப்பல் கட்டல் மற்றும் திருத்தல் கைத்தொழில் கடந்த சில ஆண்டுகளாக அதன் உட்கட்டமைப்பு வசதிகளையும் தொழில்நுட்பம் மற்றும் தேர்ச்சிகளையும் தொடர்ந்து மேம்படுத்தி வந்திருக்கிறது. நிருமாணக் கைத்தொழிலில் ஏற்பட்டுவரும் மிதமான விரிவாக்கம் கம்பிகள், அலுமினிய உற்பத்திகள் மற்றும் மின்விளக்குப் பொருத்திகள் என்பனவற்றிற்கான கேள்வியை அதிகரித்தன. உற்பத்திகளின் தரங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் முன்னேற்றம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கம்பிகளையும் மின்விளக்குப் பொருத்திகளையும் கூடுதலாகப் பாவிப்பதற்கு கட்டிடம் கட்டுவோரை ஊக்குவித்து வருகின்றன. கட்டிடவாக்கத் கைத்தொழிலில் மர உற்பத்திகளுக்காக அலுமினிய உற்பத்திகளைப் பதிலீடு செய்வது பிரபல்யம் பெற்றுவருகின்றது. விலை அனுகூலம் மற்றும் நீண்டகாலப் பாவனை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு மரத்தளபாடங்களிலிருந்து உலோக தளபாடங்களுக்கு மாறிக் கொண்டமையின் காரணமாக 2001இல் வீட்டுத் தளபாடங்களுக்கான கேள்வி அதிகரித்தது. 2001இல் உந்து சொகுசு வண்டிகளின் உருவமைப்பின் வெளியீடு வீழ்ச்சியடைந்தமைக்கு பிராந்திய பேரூந்து கம்பனிகள் மற்றும் தனியார் துறையிலிருந்தான கட்டளைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். நீண்ட வரட்சியின் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைப்பு வேளாண்மை பொறி மற்றும் ஏனைய நீண்டகால நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியை வீழ்ச்சியடையச் செய்தது.

## ஏனைய உற்பத்திகள்

2001இல் தாள் மற்றும் தாள் உற்பத்திகளின் வெளியீடு 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. செய்தித்தாள்கள், நூல்கள், சஞ்சிகைகள், சுட்டுத்துண்டுகள், சுவரொட்டிகள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் என்பன 2001இல் ஒப்பீட்டுரீதியில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன. தொழில்நுட்பத்திற்கும் தொடர்ச்சியாகக் காணப்பட்ட மேம்பாடு மற்றும் நவீன கருவிகளின் பயன்பாடு என்பனவற்றின் காரணமாக அச்சிடப்பட்ட பொருட்களின் தரம் குறிப்பிடத் தக்களவிற்கு முன்னேற்றங் கண்டது. குறிப்பாக, அரசியல், மொழிகள், வியாபாரம் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைத் துறைகளிலுள்ள சஞ்சிகைகளுக்கும் சிறுபத்திரிகைகளுக்கும் உயர்ந்த கேள்வி காணப்பட்டது. விளம்பரங்களுக்கான சுவரொட்டிகளின் பிரபல்யம் அதிகரித்துவருவது இவ்வுற்பத்திகளுக்கான கேள்வியைத் தூண்டியது. நெளிவாக்கப்பட்ட அட்டைகள், பொதியிடல் பொருட்கள் என்பனவற்றிற்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் மெதுவான வளர்ச்சியே காரணமாகும். முதலீட்டுச் சபைக் கைத்தொழில களினால் தயாரிக்கப்பட்ட புகைப்பட அல்பங்கள், நூல்கள் மற்றும் பருவகால வெளியீடுகள், தாள் சாக்குகள் போன்ற உற்பத்திகளின் வெளியீடு இவ்வாண்டில் மிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தது.


மர உற்பத்திகளுக்குப் பதிலாக உருக்கு மற்றும் பிளாத்திக்கு தளபாடங்களுக்கான பிரபல்யம் அதிகரித்து வருவதன் காரணமாக மர, மர உற்பத்திகளுக்கான கேள்வி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. மூலப்பொருட்களுக்கான அதிகரித்த விலைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக மர, மர உற்பத்தி கைத்தொழில் பாதிக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட தளபாடங்களின் கிடைப்பனவும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தளபாடங்களுக்கான கேள்வியைக் குறைத்தது. ஏற்றுமதிச் சந்தைக்கான முதலீட்டுச்சபை நிறுவனங்களினால் விளையாட்டுச் சாதனங்கள், மர கல்விசார் பொருட்கள், மரப்பொம்மைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் போன்ற மரஉற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன. பல முக்கிய தயாரிப்பாளர்கள் மரத்தயாரிப்புக் கைத்தொழிலுள்ள பெரும்பாலும் கைகளினால் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்குப் பதிலாக புதிய பொறிகளை நிறுவினர்.

ஏற்றுமதி சார்ந்த தும்புக் கைத்தொழில் ஒப்பீட்டு ரீதியில்உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு புதிய வடிவங்களிலமைந்த உற்பத்திகளின் அறிமுகம், மேம்பட்டதரம் மற்றும் வாடிக்கையாளர்களுடனான நெருங்கிய உறவுமுறை என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட நன்மைகளே காரணமாகும். 2001இல் தெங்கு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு, இக் கைத்தொழிலில் அடிப்படை மூலப்பொருட்களின் செலவு அதிகரித்தமையே காரணமாகும். தும்பு போன்ற அளவில் பெரியமூலப்பொருட்கள் எரிபொருள் விலை உயர்வுகளின் விளைவாக போக்குவரத்துச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்டன. தொடர்பான ஆண்டுப்பகுதியில் டொலர் நியதிகளில் தும்பின் பன்னாட்டு விலைகள் மாற்றமின்றிக் காணப்பட்டன. இவ்வுற்பத்திகளுக்கான உயர்ந்த போட்டி இந்தியா, பிலிப்பைன்சு, மற்றும் தென்னமெரிக்கா நாடுகளிலிருந்து ஏற்பட்டது. தும்பு உற்பத்திகளின் ஏற்றுமதி விலைகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்த கப்பற்கட்டணச் செலவுகள் 2001இல் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடையவில்லை. உள்நாட்டுச் சந்தையில், வழமையான படுக்கைத் தயாரிப்பாளர்கள் தும்பிற்குப் பதிலாக மலிவான புடவைக் கழிவுகளுக்கு மாறிக்கொண்டமையினால் தும்பு மெத்தைகளுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தது.

## அரசதுறைக் கைத்தொழில்கள்

2001ஆம் ஆண்டில் உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு 2000ஆம் ஆண்டின் 24.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டின் தடங்கலற்ற உற்பத்தியுடன் ஒப்பீடுகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்த்தூய்மி வழமையான பேணல் வேலைகளுக்காக ஆண்டின் தொடக்கத்தில் ஏறத்தாழ ஒரு மாதகாலத்திற்கு மூடப்பட்டிருந்தமையே அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய பொறுப்பாக இருந்தது. அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு வகைகூறிய இலங்கைப் பெற்றோலிய

வரைபடம் 4.4
கைத்தொழில் உற்பத்தியில் அரச, தனியார் துறையின் பங்கு



**அட்டவணை 4.4**
**அரச துறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்**

*1977=100*

| வகை | சுட்டெண் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(அ) | 2000 | 2001(அ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 100.0 | 105.6 | 106.5 | 139.8 | 128.1 | 31.3 | -8.4 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | - | - | - | | | | |
| 3.மர, மர உற்பத்திகள் | 100.0 | 119.2 | 126.5 | 213.3 | 127.9 | 68.6 | -40.0 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 100.0 | 74.3 | 38.2 | 29.6 | 40.6 | -22.4 | 37.1 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 100.0 | 98.3 | 84.4 | 104.9 | 93.0 | 24.3 | -11.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | | | | | | | |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 100.0 | 95.2 | 84.4 | 104.9 | 93.2 | 24.3 | -11.2 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 100.0 | 143.0 | 70.5 | 82.6 | 83.4 | 17.2 | 1.0 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் | - | - | - | | | | |
| போக்குவரத்துக் கருவிகளும் | | | | | | | |
| எல்லா வகைகளும் | 100.0 | 97.9 | 83.1 | 103.2 | 91.5 | 24.2 | -11.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்தவை | 100.0 | 93.5 | 68.5 | 82.8 | 78.0 | 20.9 | -5.8 |

*(அ) தற்காலிகமானவை.*                                                    *மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

கூட்டுத்தாபனத்தின் வெளியீடு, 2001இல் 11.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய உற்பத்தி தவிர்ந்த அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடும் 2001இல் ஏறத்தாழ 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.


வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் அதன் தொழிற்சாலைகள் சிலவற்றை அச்சிடப்பட்ட உற்பத்திகள், ஈருருளி, டயர்கள் மற்றும் டியூப்புக்கள் மற்றும் முச்சில்லு வண்டிக்கான டயர்கள் போன்ற ஏற்றுமதிச் சந்தைக்கான முடிவு நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்கு மாற்றிக்கொண்டது. 2001இல் வரையறுக்கப்பட்ட தேசியதாள் கம்பனி பதனிடலுக்காக கூடுதலான கழிவுத்தாள்களை பெற்றுக்கொண்டது.

அரச மரக்கூட்டுத்தாபனம் மின்கம்பங்கள் மற்றும் புகைவண்டிக் கிடைக்கட்டைகளுக்காக இலங்கை மின்சபையிடமிருந்தும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியிலிருந்தும் குறைந்த கேள்வியினையே பெற்றது. 2001இல் வரையறுக்கப்பட்ட செவனகல சீனித் தொழிற்சாலையின் வெளியீடு 20.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு பயிர்விளைச்சலில் ஏற்பட்ட குறைப்பு, கரும்பு விளையும் பிரதேசங்களில் காணப்பட்ட நீண்ட வரட்சியின் விளைவாக சீனி பெறும் வீதத்தில் ஏற்பட்ட குறைப்பு, காட்டுத்தீயினால் கரும்பு பயிர்ச்செய்கை சிதைந்து போனமை என்பனவே காரணங்களாக இருந்தன.

## 4.3 கூட்டிய பெறுமதி

2001ஆம் ஆண்டில் பெயரளவு நியதிகளில் கைத்தொழில் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் கூட்டப்பட்ட பெறுமதி 3.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டது. உற்பத்தியின் மொத்தப் பெறுமதியின் விகிதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி 2001இன் 36 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. மந்தமடைந்த உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் பொருளாதாரத்தில் காணப்பட்ட அமைப்பியல் ரீதியான தடைகள் என்பன காரணமாக ஏற்பட்ட குறைந்த இயலளவுப் பயன்பாடு கைத்தொழில் துறையின் கூட்டப்பட்ட பெறுமதியினை மோசமாகப் பாதித்தது. கைத்தொழில் துறையின்

**வரைபடம் 4.5**
**கைத்தொழில் உற்பத்தியின் கூட்டப்பட்ட சதவீதப் பெறுமதி – 2001**



**அட்டவணை 4.5**
**கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி**
**(நடைமுறை விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(அ) | 2000 | 2001(அ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 35,515 | 40,452 | 44,503 | 49,031 | 54,282 | 10.2 | 10.7 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 40,514 | 47,494 | 55,263 | 69,451 | 71,263 | 25.7 | 2.6 |
| 3.மர, மர உற்பத்திகள் | 1,258 | 1,313 | 1,390 | 1,554 | 1,639 | 11.8 | 5.5 |
| 4.தாளும் தாள் உறபத்திகளும் | 2,633 | 2,578 | 2,664 | 2,808 | 3,103 | 5.4 | 10.5 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 10,745 | 14,274 | 13,832 | 17,771 | 19,245 | 28.5 | 8.3 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 11,600 | 12,463 | 13,817 | 14,240 | 16,010 | 3.1 | 12.4 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 598 | 710 | 777 | 959 | 1,131 | 23.4 | 17.9 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,924 | 6,779 | 7,367 | 7,714 | 8,731 | 4.7 | 13.2 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3,157 | 3,426 | 3,799 | 3,965 | 4,154 | 4.4 | 4.8 |
| மொத்தம் | 111,944 | 129,489 | 143,412 | 167,493 | 179,559 | 16.8 | 7.2 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.

உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஆண்டின் பின்னரைப் பகுதியில் மின்வெட்டு என்பன கைத்தொழில் துறையில் கூட்டப்பட்ட பெறுமதியின் உள்ளார்ந்த வளர்ச்சியை குறைத்துவிட்டது. 2001இல் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் போன்ற முக்கிய கைத்தொழில் வகைகளின் கூட்டப்பட்ட பெறுமதி விகிதம் வீழ்ச்சியடைந்தது. பெறுமதி கூட்டப்பட்ட விகிதம் குடிபானம் மற்றும் புகையிலை, உற்பத்திகள் மர மற்றும் மர உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் எனபனவற்றில் 45 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டன. ஆகக் குறைந்த பெறுமதி கூட்டப்பட்ட விகிதமான 24.5 சதவீதம் இரசாயனம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளில் காணப்பட்டன.

## 4.4 உற்பத்திச் செலவு, இலாபத்தன்மை மற்றும் தொழில்நிலை

முதலீட்டுச்சபையல்லாக் கைத்தொழில் துறையின் சராசரித் தொழிற்சாலை இலாபவீதம் 2000ஆம் ஆண்டின் 13.7 சதவீதத்திலிருந்து 2001இல் 10.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிற்சாலை இலாபவிகிதமானது உற்பத்தியின் மொத்தச் செலவிலும் பார்க்க உற்பத்தியின் தொழிற்சாலைப் பெறுமதி மிகையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் உயர்ந்த செலவு அதிகரித்த எரிபொருள், மின்வலு மற்றும் தொலைத்தொடர்பூட்டல் விலைகள் மற்றும் உயர்வட்டி வீதங்கள் என்பனவற்றின் காரணமாக உற்பத்திச் செலவில் ஏற்பட்ட உயர்வு கைத்தொழில்களின் இலாபத்தன்மையினை மோசமாகப் பாதித்தது. இறக்குமதித்தீர்வைகள் மற்றும் கம்பனி வரிகள் மீதான மேலதிகக் கட்டணங்கள் மற்றும் பாதுகாப்புத் தீர்வையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன இலாப அளவில் மேலும் கீழ்நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. எனினும், செலவு அதிகரிப்புக்களில் ஒருபகுதி நுகர்வோரின் மீது சுமத்தப்பட்டது. ஏற்றுமதி சார்ந்த மற்றும் இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்களைப் பொறுத்தவரை ரூபாவின் பெறுமானத்தேய்வு வீழ்ச்சியடைந்து செல்லும் இலாப அளவின் மீதான அழுத்தத்தினை மென்மைப்படுத்தியது. இலாப அளவின் அழுத்தமும் விரயங்களின் குறைப்பு, வலுச்சேமிப்பு, மூலவளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தல், மேம்பட்ட கொள்வனவு நடைமுறைகள், வெளியிலிருந்து பொருட்களை உற்பத்தி செய்தல் என்பனவற்றின் காரணமாக ஓரளவிற்கு குறைக்கப்பட்டது. குறுங்கால கடன்பாடுகளைக் குறைத்து அதன் மூலம் வட்டிச் செலவுகளைக் குறைப்பதற்காக முகாமைத்துவ தொழிற்படு மூலதனத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதில் தயாரிப்பாளர்களும் கூடிய கவனத்தினைச் செலுத்தினர். முதலீட்டுச் சபையல்லா கைத்தொழில் துறையின் இலாபத்தன்மை புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகைகளில் காணப்பட்ட 15.1 சதவீதத்திலிருந்து மற்றைய தயாரிப்புத் துறைகளில் காணப்பட்ட 9.1 சதவீதம் வரையில் வேறுபட்டது. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகையின் இலாபத்தன்மை 2000ஆம் ஆண்டின் 19.8 சதவீதத்திலிருந்து 2001இல் 15.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 4.6
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)

| வகைகள் | மொத்த உற்பத்திச் செலவு (ரூ. மில்) | | மொத்த உற்பத்திப் பெறுமதி (ரூ. மில்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (வீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2000 | 2001(ஆ) | 2000 | 2001(ஆ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 50,311 | 60,507 | 58,230 | 67,081 | 13.6 | 9.8 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 16,103 | 15,620 | 20,078 | 19,576 | 19.8 | 15.1 |
| 3.மர, மர உற்பத்திகள் | 985 | 1,126 | 1,140 | 1,268 | 13.6 | 11.2 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 3,546 | 4,074 | 3,989 | 4,551 | 11.1 | 10.5 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 21,927 | 25,252 | 25,232 | 27,780 | 13.1 | 9.1 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 13,920 | 15,843 | 15,432 | 17,623 | 9.8 | 10.1 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,554 | 1,825 | 1,758 | 2,023 | 11.6 | 9.8 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 10,144 | 11,464 | 11,540 | 12,752 | 12.1 | 10.1 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,238 | 2,644 | 2,540 | 2,908 | 11.9 | 9.1 |
| மொத்தம் | 120,728 | 139,355 | 139,939 | 155,562 | 13.7 | 10.4 |

(அ) 480 முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2001இல் மொத்த உற்பத்திச் செலவில் கூலிச்செலவின் பங்கு, இவ்வாண்டில் கூலிச்செலவில் முக்கிய திருத்தங்கள் எதுவும் செய்யப்பட்டமையினால் 12 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது. வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட உயர்வு காரணமாக கூலி அதிகரிப்பிற்கான அழுத்தம் அதிகரித்துக் காணப்பட்டது. தயாரிப்பாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடான சந்தைச்சூழல் அழுத்தத்தினை மென்மைப்படுத்தியதுடன் அதன் மூலம் கூலிச்செலவின் அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டது. ஆடைக் கைத்தொழிலின் மேலதிக நேரக் கொடுப்பனவு குறைந்த இயலளவுப் பயன்பாட்டின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. சில தயாரிப்பாளர்கள் குறைந்த ஏற்றுமதிக் கட்டளைகளின் காரணமாக அரைமாதச் சம்பளத்தை மட்டும் செலுத்தி ஊழியர்களை வீடுகளில் இருக்குமாறு கேட்டுக்கொண்டனர். பல கம்பனிகள் மொத்த கூலிச்செலவினைக் குறைப்பதற்காக உயர்ந்த செலவுகளைக் கொண்ட அலகுகளை வெளிமூலங்களின் வாயிலாக செய்துமுடிக்கும் உபாயத்தினை பின்பற்றின. ஒருசில கம்பனிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதிய திட்டங்களும் மொத்தக் கூலிச் செலவினைக் குறைப்பதன் மீது நல்ல தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. கடுமையான தொழிலாளர் சட்டங்களும் பருவகால உற்பத்தித் தேவைப்பாடுகளும் ஒப்பந்த அடிப்படையிலான மற்றும் அமைய தொழிலாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு தயாரிப்பாளர்களை ஊக்குவித்ததுடன் கூலிச்செலவின் மீதான மேல்நோக்கிய அழுத்தத்தினையும் குறைத்தது. மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாகப் பார்க்கையில் கூலிச்செலவு உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, மற்றும் தயாரிப்பு உற்பத்திகளில் அதிகரித்துக் காணப்பட்டது. தொழிலாளர் செலவின் பங்கு புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், தாள் மற்றும் தாள் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளில் வீழ்ச்சியடைந்தன. தொழிலாளர் செலவின் பங்கு புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், மர மற்றும் மர உற்பத்திகள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளில் 15 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. உணவு, குடிபானம், புகையிலை மற்றும் அடிப்படை உலோக உற்பத்திகளைக் கொண்ட கைத்தொழில் வகைகளில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த தொழிலாளர் செலவு காணப்பட்டது.

மொத்த உற்பத்திச் செலவில் வலுச்செலவின் பங்கு 2000ஆம் ஆண்டின் 4.7 சதவீதத்திலிருந்து 2001இல் 5.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. மின்வலு, வாயு, உலைஎண்ணெய் மற்றும் டீசல் என்பனவற்றின் விலைகளில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தம் சிக்கனப்பகுதியில் வலுச்செலவில் அதிகரிப்பு

**அட்டவணை 4.7**
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)
(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)

| வகைகள் | உள்நாட்டுச் செலவு (சதவீதம்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
| | 2000 | 2001(ஆ) | 2000 | 2001(ஆ) | 2000 | 2001(ஆ) | 2000 | 2001(ஆ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 2.3 | 2.8 | 9.2 | 9.6 | 35.2 | 36.1 | 1.6 | 1.9 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 3.5 | 4.0 | 16.0 | 15.2 | 13.5 | 13.8 | 2.6 | 2.9 |
| 3.மர, மர உற்பத்திகள் | 8.3 | 8.8 | 16.6 | 16.1 | 37.1 | 35.2 | 4.2 | 4.8 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 2.5 | 3.0 | 13.1 | 12.6 | 15.2 | 16.1 | 3.9 | 4.3 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 4.6 | 5.0 | 12.8 | 12.9 | 29.2 | 27.1 | 3.2 | 4.3 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 16.4 | 17.9 | 16.3 | 16.3 | 28.3 | 28.1 | 3.1 | 2.8 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 7.9 | 8.5 | 10.8 | 10.9 | 33.5 | 34.2 | 3.8 | 4.0 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 3.2 | 3.8 | 10.8 | 11.5 | 23.2 | 23.9 | 4.2 | 5.0 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 4.2 | 4.9 | 14.0 | 13.1 | 34.5 | 34.2 | 2.1 | 2.3 |
| மொத்தம் | **4.7** | **5.3** | **12.0** | **12.0** | **28.8** | **29.2** | 2.5 | 2.9 |

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


ஏற்படுவதற்கு பொறுப்பாக இருந்தது. சீமெந்து, மட்பாண்டம், கண்ணாடி மற்றும் அடிப்படை உலோகம் போன்ற உயர்ந்த வலு நுகர்வைக் கொண்ட கைத்தொழில்கள் அதிகரித்த வலு விலைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களாக இருந்தன. 2001இல் மொத்த உற்பத்தி செலவில் மின்வலுச் செலவின் பங்கு அனைத்து வகைக் கைத்தொழில்களிலும் அதிகரித்தது. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகையினது மொத்த உற்பத்திச் செலவில் வலுச் செலவுகளினது பங்கு 2000ஆம் ஆண்டின் 16.4 சதவீதத்திலிருந்து 2001இல் 17.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. உணவு, குடிபானம் மற்றும் புகையிலை மற்றும் தாள் மற்றும் தாள் உற்பத்தி வகைகளில் வலுச்செலவுகளின் பங்கு குறைவாகக் காணப்பட்டது.

மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக வட்டிச்செலவு முன்னைய ஆண்டின் 2.5 சதவீதத்தலிருந்து 2001இல் 2.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்தச் செலவுகளில் முக்கியமற்ற பங்கினை வகிக்கும் வட்டிச் செலவானது உயர்ந்த உற்பத்திச் செலவுகளுக்கு இட்டுச் செல்லுகின்றது என்ற பரந்தளவு விவாதத்தினை வெற்றாக்குகின்றபோதும், பொதுவாக வட்டிச்செலவானது தொழில்முயற்சிகளின் வளர்ச்சியினையும் போட்டித்தன்மையினையும் தடைசெய்கிறது. சில தயாரிப்பாளர்கள் தொழிற்படுகின்ற மூலதனத் தேவைப்பாடுகளை பொருத்தமான முறையில் முகாமைப்படுத்துவதன் மூலமாக வட்டிச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்கு வெற்றிகரமாக முயன்றிருப்பது 2001இல் குறிப்பிடத்தக்கதொரு ஆரோக்கியமான அபிவிருத்தியாகும். அனைத்து தொழில்முயற்சியாளர்களும் வங்கிக்கடன்பாடுகளின் மீதான தமது வட்டிச் செலவுகளை வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற மற்றைய பல்வேறு சந்தைக்கருவிகளை நாடுவதன் மூலம் குறைப்பதற்கு இது சரியான நேரமாகும். தொழில்முயற்சியாளர்கள் பணச்சந்தையிலிருந்து படுகடன் சந்தைக்கு மாறுவதனை இயலச்செய்கின்ற வசதிகளையுடைய சூழலொன்றினை வழங்குவது மேலாண்மையாளர்களுக்கு ஒரு சவாலாக இருக்கிறது.

## கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தித்திறன்

மனித மணித்திலாயமொன்றிற்கான கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறன் 480 முதலீட்டுச் சபையல்லா தொழில்முயற்சிகளில் 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 2001இல் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தொழிலாளர் உற்பத்தித்திறன் குறைவு பல கைத்தொழில் வகைகளிலும்

வரைபடம் 4.6
கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தியாக்கம் - 1995=100




அவதானிக்கப்பட்டது. தொழிலாளர் உற்பத்தித்திறன் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (7.1 சதவீதம்), உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (2.6 சதவீதம்) மர மற்றும் மர உற்பத்திகள் (3.4 சதவீதம்) என்பனவற்றில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் மந்தமடைந்தமையின் விளைவாக ஏற்பட்ட குறைந்த இயலளவுப் பயன்பாடே தொழிலாளர் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைந்தமைக்கான முக்கிய காரணமாக இருந்தது. கடுமையான தொழிலாளர் ஒழுங்குவிதிகள், மோசமான வேலைச்சூழல், தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள்

அட்டவணை 4.8
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் குறிகாட்டி (அ)

1995 =100

| வகை | 2000 | 2001 (ஆ) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 121.8 | 118.6 | -2.6 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 112.4 | 104.4 | -7.1 |
| 3.மர, மர உற்பத்திகள் | 101.7 | 98.2 | -3.4 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 101.2 | 100.8 | -0.4 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 120.6 | 123.2 | 2.2 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 104.2 | 105.8 | 1.5 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 99.3 | 98.6 | -0.7 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 117.0 | 113.1 | -3.4 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 101.2 | 101.8 | 0.6 |
| மொத்தம் | 111.9 | 109.1 | -2.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தற்காலிகமானவை

போதாமை, வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் மற்றும் வேலைக்கு வராமலிருப்பதும் அதிகமாகக் காணப்படுவது அவநம்பிக்கையான தொழில்தருநர்-ஊழியர் உறவுமுறை என்பனவும் 2001இல் தொழிலாளர் உற்பத்தித்திறனை மோசமாகப் பாதித்தன. 2001இல் தொழிலாளர் உற்பத்திதிறனை மேம்படுத்துவதனை நோக்கிய சாதகமான அபிவிருத்திகளாக ஒருசில தயாரிப்பாளர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டங்களும் தொழிற்சங்கங்களுடன் கையெழுத்திட்ட கூட்டு உடன்படிக்கைகளும் காணப்பட்டன.

## தொழில்நிலை

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைகள் மந்தமடைந்தமையின் காரணமாக இயலளவுப் பயன்பாடு குறைவடைந்தமையை பிரதிபலிக்கின்ற விதத்தில். 2001இல் முதலீட்டுச் சபையல்லா கைத்தொழிலுள்ள தொழில் நிலை 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வெளியீட்டில் குறைப்பு காணப்பட்டபோதும்

அட்டவணை 4.9
முதலீட்டுச் சபையல்லாத தனியார் துறைக் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பு (அ)

| | வகை | 1999 | 2000 (ஆ) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| (i) | முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை | | | |
| | 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 25,350 | 26,190 | 3.3 |
| | 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 30,250 | 28,950 | -4.3 |
| | 3. மர, மர உற்பத்திகள் | 1,359 | 1,376 | 1.3 |
| | 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 5,374 | 5,560 | 3.5 |
| | 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்குஉற்பத்திகள் | 21,650 | 20,800 | -3.9 |
| | 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,300 | 8,908 | -4.2 |
| | 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 785 | 772 | -1.7 |
| | 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 11,625 | 11,792 | 1.4 |
| | 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3,935 | 4,194 | 6.6 |
| | உப மொத்தம் | 109,628 | 108,542 | -1.0 |
| (ii) | முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகள் | | | |
| | மொத்தம் | 109,628 | 108,542 | -1.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.

(ஆ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

கடுமையான தொழிலாளர் சட்டங்களின் காரணமாக தயாரிப்பாளர்கள் தங்களின் நிரந்தர தொழிலாளர்களைக் குறைப்புச் செய்யமுடியாதவர்களாக இருந்தனர். எனினும் சில தயாரிப்பாளர்கள் மிகையாகவுள்ள தொழிலாளர்களை ஆட்குறைப்புச் செய்வதற்காக கவர்ச்சிகரமான சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டங்களை வழங்கிய வேளையில் மற்றையவர்கள் இடர்பாடான சந்தைச் சூழலை எதிர்கொள்ளும் பொருட்டு ஒப்பந்த மற்றும் அமையத் தொழிலாளர்களை நீக்கிவிட்டனர். தன்னியக்க முறைகளிலமைந்த நவீன தொழிற்சாலைகளும் கைத்தொழில் துறையின் தொழிலாளர் தேவைப்பாடுகளைக் குறைத்துவிட்டன. 2001இல் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளிலுள்ள தொழில்நிலை வீழ்ச்சியடைந்து குறைந்தளவு இயலளவுப் பயன்பாட்டினைப் பிரதிபலித்தது. உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், உருவமைக்கப்பட் உலோக உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளில் தொழில்நிலை உருவாக்கம் உயர்வாக இருந்தது.


## 4.4 முதலீடு

### வெளிநாட்டு முதலீடு

முதலீட்டுச் சபையினால் தீவிரமான ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் இலங்கைக்கான வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. உலக பொருளாதார நடவடிக்கைகளின் கீழ்நோக்கிய போக்கு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான மூலதன உட்பாய்ச்சலில் காணப்பட்ட பின்னடைவு, உள்நாட்டு யுத்தம் மற்றும் அரசியலுடன் தொடர்பான நிச்சயமற்ற தன்மை என்பனவற்றின் காரணமாக முதலீட்டாளர் நம்பிக்கை மோசமடைந்தமை மற்றும் யப்பானிய பொருளாதாரத்தின் மந்தநிலை என்பன இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சலை மோசமாகப் பாதித்தன. ஐக்கிய அமெரிக்கவிலிருந்தும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தும் முன்னுரிமை வர்த்தக நடைமுறைகளின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் துணை சாகரா மற்றும் கரிபியனிலுள்ள நாடுகள் கூடுதலான முதலீடுகளைக் கவர்ந்து கொண்டமையானது இலங்கை உட்பட ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான மூலதனப் பாய்ச்சலைக் குறைத்துவிட்டது. முதலீட்டுச்சபைக் கைத்தொழில்களின் பெறப்பட்ட மூலதனமும் அதேபோன்று ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களிலுள்ள முதலீட்டுக் கடப்பாடுகளும் 2001இல் வீழ்ச்சியடைந்தன.

வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள முக்கிய அரச நிறுவனமான

வரைபடம் 4.7
முதலீட்டுச் சபையின் அடையப்பட்ட முதலீடுகள்




முதலீட்டுச்சபை 2001இல் முதலீட்டு ஊக்குவிப்புக்கள், மாநாடுகள், கண்காட்சி என்பனவற்றிற்காக உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பல பேராளர் குழுக்களை ஒழுங்குசெய்தது. 2001இல் முதலீட்டுச்சபை வங்களாதேசம், டென்மார்க், பிரான்சு, இசுரேல், நோர்வே, மலேசியா, சுவீடன், சிங்கப்பூர், ஐ.இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பேராளர் குழுக்களை அனுப்பியது. ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை உயர்தூதுவராலயத்தின் ஒத்துழைப்புடன் முதலீட்டுச்பை இலண்டனில் முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஒழுங்குசெய்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இலங்கையிலுள்ள புடவை, ஆடை, துணை உற்பத்திகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில்களுக்கு முதலீட்டாளர்களைக் கவர்வதேயாகும். ஐக்கிய அமெரிக்காவிற்கு வருகைதந்த முதலீட்டுப் பேராளர் குழு ஐக்கிய அமெரிக்க ஆடை தயாரிப்பாளர் சங்கம், ஐக்கிய அமெரிக்க ஆடை இறக்குமதியாளர் சங்கம் என்பனவற்றின் முக்கிய உறுப்பினர்களையும், இராசாங்க துணைச் செயலாளர்களையும் முன்னணிக் கம்பனிகளின் மூத்த நிருவாகிகளையும், ஐக்கிய அமெரிக்க வர்த்தக சம்மேளத்தினையும் சந்தித்தார்கள். சுவீடன் முதலீட்டு ஊக்குவிப்பு பேராளர்குழு, இலண்டன் வர்த்தக சம்மேளத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பிரித்தானிய வர்த்தகக்குழு என்பனவற்றை உள்ளடக்கிய பல வெளிநாட்டு பேராளர்குழுக்கள் புதிய முதலீட்டு வாய்ப்புக்களைக் கண்டறியும் பொருட்டு 2001இல் இலங்கைக்கு வருகை தந்தன. உணவு மற்றும் குடிபானம், கடல்சார் பொறியியல் மற்றும் கழிவு முகாமைத்துவம் என்பனவற்றிலுள்ள பல்வேறு துறைகளில் முதலீடு செய்யத்தக்க வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்களை உள்ளடக்கிய பெல்ஜியத்தின் வர்த்தக முதலீட்டு பேராளர் குழுவொன்று 2001 மார்ச்சில் இலங்கைக்கு வருகை தந்தது. இலங்கை-மலேசியா வாணிப மேம்பாட்டு முதலீட்டுச்சந்தை என்பதன் மீது கொழும்பில் இடம்பெற்ற முதலீட்டு ஊக்குவிப்புச் சந்தை

**அட்டவணை 4.10**
**முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளில் பெறப்பட்ட முதலீடுகள் (அ)**

| வகைகள் | தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | | வெளிநாட்டு முதலீடு (ரூ.மில்) | | மொத்த முதலீடு (ஆ) (ரூ.மில்.) | |
|---|---|---|---|---|---|---|
| | 2000(இ) | 2001(ஈ) | 2000(இ) | 2001(ஈ) | 2000(இ) | 2001(ஈ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 141 | 146 | 4,301 | 5,058 | 10,612 | 11,088 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 439 | 458 | 20,463 | 22,006 | 30,779 | 32,823 |
| 3.மர, மர உற்பத்திகள் | 22 | 22 | 458 | 1,300 | 830 | 1,648 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும | 22 | 21 | 521 | 517 | 755 | 744 |
| 5.இரசாயனம, பெறறோலியம, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 121 | 126 | 8,340 | 10,178 | 12,414 | 14,101 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 61 | 57 | 3,581 | 3,183 | 6,631 | 6,642 |
| 7.உருவமைக்கபபட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 41 | 41 | 3,873 | 3,769 | 5,093 | 5,116 |
| 8.வேறு எங்கும் குறிப்பிடபபடாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 159 | 155 | 6,253 | 5,924 | 8,937 | 8,322 |
| 9.பணிகள் | 497 | 535 | 84,025 | 89,355 | 118,675 | 127,595 |
| மொத்தம் | 1,503 | 1,561 | 131,814 | 141,290 | 194,727 | 208,079 |

(அ) ஆண்டு இறுதியில் திரண்ட மொத்தம்.
(ஆ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்.
(இ) திருத்தப்பட்டவை.
(ஈ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை.

மலேசியாவிலிருந்து முதலீட்டாளர்களைக் கவர்ந்தது. மலேசியாவிலுள்ள பல்வேறு தேசிய மற்றும் சீன சம்மேளனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 25இற்கு மேற்பட்ட மலேசியன் கம்பனிகள் இச் சந்தையில் பங்கேற்றுக் கொண்டன.

ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும் முதலீட்டுக் கடப்பாடுகளும் 2001இல் வீழ்ச்சியடைந்தன. முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் முதலீட்டுச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 333 உடன் ஒப்பிடுகையில் 2001இல் 262இற்கு வீழ்ச்சியடைந்தது. இச் செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடுகளும் 2000ஆம் ஆண்டின் ரூ.89622 மில்லியனிலிருந்து 2001இல் ரூ.55285 மில்லியனுக்கு 38 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் வெளிநாட்டு முதலீட்டுக்கூறு 2000ஆம் ஆண்டின் ரூ.25084 மில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 331.1 மில்லியன்) 2001இல் ரூ.30606 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 342.5 மில்லியன்) அதிகரித்தது. 2001இல் ஒப்புதளிக்கப்பட்ட மொத்த முதலீட்டில் வெளிநாட்டுக்கூறு ஏறத்தாழ 55.4 சதவீதமாக இருந்தது. 2001ஆம் ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 64 முழுமையாக வெளிநாட்டவர்களுக்கு சொந்தமானதாகவும் 76 கூட்டு ஒத்துழைப்புடன் கூடிய முயற்சிகளாகவும் 122 முழுமையாக உள்நாட்டவர்களுக்கு சொந்தமான முயற்சிகளாகவும் காணப்பட்டன. இச் செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட தொழில்நிலை உருவாக்கம் 34,502 ஆட்கள் ஆகக் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் வகைப்படியான பகுப்பாய்வு 27 செயற்றிட்டங்கள் புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகையிலும் 20 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் வகையிலும் 17 உணவு, குடிபானம் மற்றும் புகையிலை வகையிலும் 13 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு வகையிலும் காணப்பட்டன. பணிகள் துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 145 ஆகக் காணப்பட்டதுடன் இதில் பெரும்பாலானவை மென்பொருள் அபிவிருத்தி செயற்றிட்டங்களாக இருந்தன. இதற்கு தகவல் தொழில்நுட்பம் முன்னுரிமைத் துறையாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும் 2000, 2001ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளினால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களுமே காரணங்களாகும். 2001 திசெம்பர் இறுதியில் முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 3,594 ஆகக் காணப்பட்டது.

முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டின் 204 இலிருந்து 2001இல் 149 இற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் இச் செயற்றிட்டங்களின்

**அட்டவணை 4.11**

**முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்**

| வகை | தொழில்நிலை (திசெம்பர் முடிவில்) | | மொத்த ஏற்றுமதி வருமானம் (ரூ.மில்) (க.எ.பெ.) | |
|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2000 | 2001 |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 15,207 | 15,112 | 12,413 | 12,861 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 242,435 | 257,515 | 162,583 | 174,527 |
| 3.மர, மர உற்பத்திகள் | 1,822 | 1,857 | 409 | 420 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 1,618 | 1,605 | 1,250 | 842 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 29,675 | 31,880 | 28,583 | 30,288 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 13,061 | 12,596 | 8,605 | 9,605 |
| 7.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 4,182 | 4,466 | 1,949 | 2,375 |
| 8.வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 33,394 | 32,449 | 24,056 | 20,384 |
| 9.பணிகள் | 26,455 | 28,552 | 18,772 | 23,912 |
| மொத்தம் | 367,849 | 386,034 | 258,620 | 275,214 |

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைனஸ் நீங்கலாக.

ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட முதலீடுகள் முன்னைய ஆண்டின் ரூ.46,829 மில்லியனிலிருந்து 2001இல் ரூ.51,682 மில்லியனுக்கு அதிகரித்தது. ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் வெளிநாட்டு முதலீட்டுக்கூறு 2000ஆம் ஆண்டின் ரூ.18,407 மில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 242.9 மில்லியன்) 2001ஆம் ஆண்டின் ரூ.8,408 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 94.1 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது. 2001இன் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டில் வெளிநாட்டுக்கூறு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டில் 16.3 சதவீதமாக இருந்தது. இச் செயற்றிட்டங்களினது தொழில் உருவாக்க இயலளவு 20,413 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது. மென்பொருள் கைத்தொழில்களையும் உள்ளடக்கிய பணிகள் துறைக் கைத்தொழில்கள் இம் முதலீடுகளில் குறிப்பிடத்தக்க பங்கினை ஈர்த்துக்கொண்டன. 2001இல் முதலீட்டுச்சபை பணிகள் துறைக்கைத்தொழில்கள் ரூ.40,300 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளுடன் 78 செயற்றிட்டங்கள் தொடர்பான உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டது.


2001 திசெம்பர் இறுதியில் முதலீட்டுச்சபை 2,237 செயற்றிட்டங்கள் தொடர்பான உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டது. 2001 இறுதிவரை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட மொத்த செயற்றிட்டங்களில் 1199 செயற்றிட்டங்கள் ரூ.211,539 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளுடன் வர்த்தகத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்தன. இச் செயற்றிட்டங்களினது வெளிநாட்டு முதலீட்டுக் கடப்பாடு ரூ.122,915 மில்லியனாக அல்லது வர்த்தகக் தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டில் 58.1 சதவீதமாக இருந்தது. இச் செயற்றிட்டங்களின் தொழில்நிலை உருவாக்க இயலளவு 337,170 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது. இச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (273 செயற்றிட்டங்கள்) உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் (123 செயற்றிட்டங்கள்) இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (114 செயற்றிட்டங்கள்) ஆகிய வகைகளில் காணப்பட்டன. 417 செயற்றிட்டங்கள் வலு, தொலைத்தொடர்பூட்டல், வர்த்தக நிலையங்கள்

**வரைபடம் 4.8**

**ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபை செயற்றிட்டங்கள்**


**வரைபடம் 4.8.1**

**ஒப்புதலளிக்கப்பட்ட, ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்கள்**




**வரைபடம் 4.8.2**

**ஒப்புதலளிக்கப்பட்ட, ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடுகள்**



மற்றும் மென்கல அபிவிருத்திகளை உள்ளடக்கிய பணிகள் துறையில் காணப்பட்டன. 196 தொழில் முயற்சிகள் முக்கிய ஏற்றுமதி பதனிடல் வலயத்திலும் சிறிய ஏற்றுமதி பதனிடல் வலயத்திலும் அமைந்திருந்த வேளையில் 1199 தொழில்முயற்சிகள் ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களுக்கு வெளியே அமைந்திருந்தன.

2001இல் முதலீட்டுச்சபைச் சட்டத்தின் (சாதாரண சட்டம்) பிரிவு 16இன் கீழ் முதலீட்டுச்சபை முன்னைய ஆண்டின் 143 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 119 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. 2001இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 55 வெளிநாட்டவர்களுக்கு முழுமையாகச் சொந்தமானதாகவும், 64 கூட்டுதொழில் முயற்சிகளாகவும் காணப்பட்டன. இச் செயற்றிட்டங்களின் உள்ளாந்த முதலீட்டு வளம் 2000ஆம் ஆண்டின் ரூ.2617 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2001இல் ரூ.2495 மில்லியனாகக் காணப்பட்டது. இச் செயற்றிட்டங்களில் வெளிநாட்டு முதலீடுகளின்கூறு ரூ.2018 மில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 81 சதவீதமாக இருந்தது. இச் செயற்றிட்டங்களில் தொழில்நிலை வளம் முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் 6551 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 3627 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது. இம் முதலீடுகள் உணவு, குடிபானம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் பணிகள் துறை ஆகிய கைத்தொழில் வகைகளில் காணப்பட்டது. ஒப்புதலளிக்கப்பட்ட தொழில்முயற்சிகளில் 436 செயற்றிட்டங்கள் 2001இன் இறுதியில் வர்த்தக தொழிற்பாட்டிலிருந்தன. இத் தொழில்முயற்சிகளின் மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு ரூ.19,389 மில்லியனாக இருந்ததுடன், இதில் ரூ. 11,090

**அட்டவணை 4.12**
**முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகள்**

| வகை | 2000 | 2001 (அ) |
|---|---|---|
| கட்டுநாயக்க ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 98 | 87 |
| பியகம ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 63 | 60 |
| கொக்கல ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 10 | 10 |
| கண்டி கைத்தொழில் பூங்கா | 4 | 4 |
| மீரிகம ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 8 | 9 |
| மல்வத்த ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 4 | 4 |
| சீதாவாக்க கைத்தொழில் பூங்கா | 9 | 11 |
| வத்துபிட்டிய ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 7 | 9 |
| மிரிஜ்ஜவெல ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | 1 | 1 |
| மாவத்தகமஏற்றுமதிப்பதனிடல் வலயம் | | 2 |
| பொல்காவெல ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | | 2 |
| கொரண ஏற்றுமதிப்பதனிடல் வலயம் | | 3 |
| தகவல் தொழில்நுட்ப பூங்கா- உ.வ.நி | 3 | 4 |
| ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியே | 1001 | 999 |
| மொத்தம் | 1208 | 1205 |

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

மில்லியன் அல்லது 57 சதவீதம் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைத்தது. இச் செயற்றிட்டங்களினது மொத்த தொழில் நிலை உருவாக்க இயலளவு 36,557 ஆட்களாக காணப்பட்டது.

## உள்நாட்டு முதலீடு

உள்நாட்டு முதலீடும், பல உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பயங்கரவாதத்துடன் தொடர்பான நிகழ்வுகளினாலும் பொருளாதாரச் சூழலினாலும் முதலீட்டாளரின் நம்பிக்கை மோசமடைந்தமையின் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் உள்ளீட்டு முதலீடுகளின் பங்கு 2000ஆம் ஆண்டின் 72 சதவீதத்திலிருந்து 2001இல் 45 சதவீதத்திற்கு கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தது. இச் செயற்றிட்டங்களினது உள்நாட்டு முதலீட்டுக் கடப்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ.64,537 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.24,679 மில்லியனாகக் காணப்பட்டது. எனினும், ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின் உள்ளூர் முதலீட்டுக் கடப்பாடு 2001இல் ரூ.43,274 மில்லியனுக்கு 52 சதவீதத்தினால் அதிகரித்தது. 2001 இறுதியில் முதலீட்டுச்சபையின் கீழ் வர்த்தக ரீதியாக தொழிற்படுகின்ற 1199 செயற்றிட்டங்களில் உள்ளூர் முதலீடுகளின் பங்கு ரூ.88,624 மில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 42 சதவீதமாகக் காணப்பட்டது. முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 16இன் கீழ் (சாதாரணச் சட்டம்) ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டுக்கூறு ரூ.477 மில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 19 சதவீதமாகக் காணப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட 1605 தொழில்முயற்சிகளின் மொத்த முதலீடு 2001 இறுதியில் ரூ.115,760 மில்லியனாகக் காணப்பட்டது. இம் முதலீடுகள் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளில் காணப்பட்டன. கொழும்பு, கம்பகா மாவட்டங்கள் இம் முதலீடுகளில் பெரும்பங்கைக் கவர்ந்து கொண்டன. இக் கைத்தொழில்களின் தொழில்நிலை உருவாக்க இயலளவு 280,225 ஆட்களென மதிப்பிடப்பட்டது.

## 4.6 கைத்தொழில் துறைக்கான கொடுகடன் கிடைப்பனவு

தொழிற்படும் மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் நடுத்தர மற்றும் நீண்டகால முதலீட்டுத்

அட்டவணை 4.13

தேசிய அபிவிருத்தி வங்கியினாலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினாலும் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் - 2001 (அ)

| வகை | சிறிய நடுத்தர உதவி செயற் றிட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப் பட்ட மீள்நிதி | | தேசிய அபிவிருத்தி வங்கி | | | | | | இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | | முழு மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரடி நிதி உதவி(ஆ) | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | ஒப்புதலளிக் கப்பட்ட கடன்கள் | | | |
| | எண் | தொகை (ரூ.மில.) | எண் | தொகை (ரூ.மில.) | எண் | தொகை (ரூ.மில.) | எண் | தொகை (ரூ.மில.) | எண் | தொகை (ரூ.மில.) | எண் | தொகை (ரூ.மில.) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 483 | 416 | 109 | 384 | - | - | 592 | 801 | 91 | 737 | 683 | 1,538 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 123 | 123 | 70 | 677 | 2 | 71 | 195 | 870 | 38 | 417 | 233 | 1,287 |
| 3.மர, மர உற்பத்திகள் | 163 | 120 | 8 | 12 | - | - | 171 | 132 | 32 | 120 | 203 | 252 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 73 | 74 | 61 | 112 | - | - | 134 | 186 | 15 | 59 | 149 | 245 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 91 | 148 | 61 | 414 | 3 | 460 | 155 | 1,022 | 19 | 208 | 174 | 1,230 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள உற்பத்திகள் | 167 | 113 | - | - | - | - | 167 | 113 | 6 | 346 | 173 | 459 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 159 | 153 | 94 | 706 | - | - | 253 | 859 | 7 | 40 | 260 | 899 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | - | - | - | - | - | 159 | 505 | 159 | 505 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 990 | 610 | 626 | 1,390 | - | - | 1,616 | 2,000 | - | - | - | - |
| மொத்தம் | 2,249 | 1,757 | 1,029 | 3,695 | 5 | 532 | 3,283 | 5,982 | 367 | 2,432 | 2,034 | 6,414 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) செயற்றிட்ட மற்றும் கருவிகள் நிதிக் கடன்கள் மட்டும்.

மூலங்கள்: இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி. தேசிய அபிவிருத்தி வங்கி.

தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக வர்த்தக வங்கிகள் மற்றும் அபிவிருத்தி வங்கிகள் ஆகினவற்றிலிருந்து கொடுகடன் வசதிகளைக் கைத்தொழில்துறை தொடர்ந்தும் பெற்றுவருகின்றது. தேசிய அபிவிருத்தி வங்கி, இ.அ.நி.கூ.வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் சிறப்புக்கடன் திட்டங்கள் நேரடிக் கடன்கள் மற்றும் பங்குடமைப் பங்கேற்பு என்பன நீண்டகால மற்றும் நடுத்தரகால கொடுகடன் வசதிகளை வழங்கின.

இவ்வாண்டில் தேசிய அபிவிருத்தி வங்கி 2001 ஏப்பிறலில் மேற்கொள்ளப்பட்ட சிறிய மற்றும் நுண்பாக கைத்தொழில் வழிகாட்டி மற்றும் செயற்றிட்ட ஊக்குவிப்பு கட்டம் இரண்டின்கீழ் மீள்நிதியிடல் வசதிகளை வழங்கியது. சிறிய மற்றும் நுண்பாக கைதொழில்கள் வழிகாட்டி-2 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2001இல் யப்பானின், பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியிலிருந்து ரூ.3.2 பில்லியன் கொண்ட தொகையைக் கடனாகப் பெற்றது. தேசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கொடுகடனில் 13.4 சதவீதம் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளிலுள்ள 592 செயற்றிட்டங்கள் தொடர்பானதாகவும் 14.3 சதவீதம் அடிப்படை உலோக உற்பத்திகள் வகையிலுள்ள 253 செயற்றிட்டங்கள் தொடர்பானதாகவும் 14.5 சதவீதம் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையிலுள்ள 195 செயற்றிட்டங்கள் தொடர்பானதாகவும் காணப்பட்டன. 2001இன் தேசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தபோதும் 2001இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டின் 1238 இலிருந்து 3283 இற்கு அதிகரித்தமைக்கு தேசிய அபிவிருத்தி வங்கியினால் அதன் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் திட்டத்தின்கீழ் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களுக்காக மீள்நிதியியடல் வசதிகளுக்கு அதிகளவில் ஒப்புதலளிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் மீதான காலாண்டு அளவீடுகளின் படி, கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்கள் 2000ஆம் ஆண்டின் ரூ.27490 மில்லியனிலிருந்து 2001இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ரூ.26995 மில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த மட்ட பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்ட குறைந்த கேள்வியும் உயர்ந்த வட்டி வீதங்களுமே முக்கிய காரணங்களாகும்.

2001இல் இ.அ.நி.உ. வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன்கள் 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், அ.நி.கூ. வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட 303 செயற்றிட்டங்களிலிருந்து 367 இற்கு அதிரித்தது.

இ.அ.நி.கூ.வங்கி ரூ.737 மில்லியன் கொண்ட நேரடிக் கொடுகடன் வசதிகளை உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் 91 செயற்றிட்டங்களுக்கும் ரூ.505 மில்லியனை உலோகமல்லா கனிப்பொருட்கள் உற்பத்திகளிலுள்ள 159 செயற்றிட்டங்களுக்கும், ரூ.417 மில்லியன் புடவை. அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகளிலுள்ள 38 செயற்றிட்டங்களுக்கும் வழங்குவதற்கு ஒப்புதலளித்தது.

## 4.7 கைத்தொழில் கொள்கை

அரசாங்கம் தனியார் துறையினரால் வழிநடத்தப்படும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் மயமாக்கல் உபாயத்தினை உள்நாட்டுக் கைத்தொழில் தளத்தினையும், ஏற்றுமதித் தளத்தினையும் விரிவாக்கம் செய்து, பன்முகப்படுத்தல் மற்றும் தரமுயர்த்தல், புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், பௌதீக மற்றும் மனிதவலு மூலவளங்களின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் மற்றும் பிராந்திய கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்தல் என்பனவற்றுடன் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் கைத்தொழில் துறையின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவும், கைத்தொழில்களின் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன் உற்பத்தியாக்கத் திறனை உயர்த்துவதற்குமாக உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பரந்தளவிலான ஊக்குவிப்புக்களை அரசாங்கம் வழங்கியது.

தொழில் முயற்சியாளர்களின் பிரச்சனைகளைப் பொருத்தமான முறையில் தீர்ப்பதற்கும், உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையினை உயர்த்துவதற்கு அவர்களை இயலச் செய்வதற்குமான ஒரு சிறந்த பொறிமுறைக்கான தேவையை அங்கீகரிக்கின்ற விதத்தில், அரசாங்கம் 2001இல் அரசியல் யாப்பு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் (தற்பொழுது கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு) அதிகாரத்தின் கீழ் உயர் அதிகாரங்களைக் கொண்ட கைத்தொழில் வசதிப்படுத்தல் அமைப்பு ஒன்று நியமிக்கப்பட்டது. இவ்வமைப்பு பிரதம மந்திரிக்கு அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன் நாளாந்தம் தமது தொழிற்பாடுகளில் எதிர்நோக்கிய பிரச்சனையையும் பற்றி தனியார் துறைக்கும், அரசதுறைக்குமிடையே தொடர்ச்சியான கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறது. விரைந்து தீர்க்கப்பட முடியாத பிரச்சனைகளும் அமைச்சரவையின் ஒப்புதல் தேவைப்படுபவையும் தொழில்முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் அல்லது பிரதம மந்திரியினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். கைத்தொழில் வசதிப்படுத்தல் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, திறைசேரி, பன்னாட்டு வர்த்தக, வாணிப மற்றும் கப்பற்படுத்தல் அபிவிருத்தி அமைப்பு, நகர அபிவிருத்தி, கட்டுமான மற்றும் பொதுவசதிகள் அமைச்சு, வலு மற்றும் சக்திவள துறைமுகங்கள் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு என்பனவற்றின் செயலாளர்களையும் உள்ளடக்கியிருக்கும்.

இவ்வாண்டில் கைத்தொழில் துறைக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனப்பாய்ச்சலுக்கு முட்டுக்கட்டையாகவுள்ள தடைகளை அகற்றுவதற்கும் அதன்மூலம் நாட்டின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்குமான ஆய்வுகளை மேற்கொண்டு முன்மொழிவுகளை மேற்கொள்வதற்குமாக 1990ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் கட்டுப்பாடுகளை நீக்கும் குழுவொன்று உருவாக்கப்பட்டது. அரசதுறை, தனியார்துறை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பன்னாட்டு முகவர்களின் தீவிரமான பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்ட இக்குழுவின் ஆலோசனைகள் தனியார்துறை நடவடிக்கைகளைப் பாதிக்கின்ற வரிஅமைப்புக்களையும் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப் படுத்தல் பொறிமுறைகளையும் பாரிய செயல் விளைவுகளுக்குட்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குழுவானது, வியாபார முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் போக்குவரத்துச் செலவு, சுங்க ஒழுங்குவிதிகள், நவீன மற்றும் வினைத்திறன் மிக்க வலுத்துறைக்கான ஒழுங்குவிதிகள், பன்னாட்டு தோற்றப்பாடுகளிலிருந்தான ஒழுங்குமுறைப்படுத்தல் பிரச்சனைகள் மற்றும் தேயிலைத்துறையில் காணப்படும் ஒழுங்குவிதிகள் என்பன தொடர்பான ஆய்வுகளை தொடங்கியுள்ளது.

சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் இயலாற்றலையும், போட்டித்தன்மையினையும் ஏற்புடைய சூழலை வலுப்படுத்தல், வர்த்தகரீதியான வலுப்படுத்தல்களூடாக நிதிவசதிகளைப் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்தல் மற்றும் பணிகளை வினைத்திறன் மிக்க முறையிலும், பயன்மிக்க முறையிலும் வழங்குவதற்கு ஏற்றவிதத்தில் வியாபார அபிவிருத்தி பணிகள் துறையின் இயலளவினை உயர்த்துதல் என்பனவற்றினூடாக அதிகரிப்பதன் மூலம் இயலாற்றல் மிக்க சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறையொன்றினை உருவாக்குகின்ற குறிக்கோளுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான நிதிஉதவியுடன் 2001இல் சிறிய நடுத்தர தொழில்முயற்சியின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. இது, இலங்கையின் அனுபவங்களையும், பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு அடுத்த மூன்றாண்டுகளுக்குரிய விதத்தில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான நோக்கினையும் உத்திகளையும் விளக்கும் சிறிய நடுத்தர தொழில்முயற்சி வெள்ளை

அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு முன்மொழிந்தது. சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான சனாதிபதி செயலணிக்குழுவும் ஆதரவளிக்கும் தொழிற்பாட்டுக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ள."வசந்தய" என அழைக்கப்படும் இன்னொரு நிகழ்ச்சித்திட்டமும் சிறிய நடுத்தர கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது தொழில்முயற்சி ஆற்றலைத் தம்மகத்தேகொண்டுள்ள இளைஞர்களை அல்லது அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்ட சிறிய தொழில் முயற்சிகளைத் தொடங்கியுள்ளவர்களை இலக்காகக் கொண்டிருந்தது. மேலும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வியாபார/கைத்தொழில் காப்புறுதித் திட்டம் சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் தொலைத்தொடர்பூட்டல் வசதிகளையும் வழங்குகின்றது. காப்புக்களில் புதிய நுழைவாளர்களுக்கு இடமளிப்பதற்காக இரண்டாண்டு காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்த ஆரோக்கியமான வியாபாரங்கள் காப்புக்களுக்கு வெளியே கொண்டு வரப்பட்டு கூடியளவிற்கு நிரந்தரமான முறையில் நிறுவப்படும்.

பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரின் நிதியுதவியுடன் 1999இல் தொடங்கப்பட்ட போட்டித்தன்மையை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் 2001இலும் தொடர்ந்தது. இச் செயற்றிட்டம் கைத்தொழில்களின் போட்டித்தன்மையினை உயர்த்துவதற்கான உத்திகளை அபிவிருத்தி செய்வதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்நுட்ப துறையாக இருந்ததுடன் இதுவரை தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம், ஆபரணம், இறப்பர், தேயிலை, சுற்றுலா, மட்பாண்டம், தும்பு மற்றும் வாசனைத்திரவியங்கள் மற்றும் அதனோடிணைந்த உற்பத்திகள் போன்ற எட்டுக் கைத்தொழில் கொத்தணிகள் நிறுவப்பட்டுள்ளன. இறப்பர் மற்றும் ஆபரணம் தவிர்ந்த மற்றைய கொத்தணிகளுக்கான உத்திகள் நிறைவடைந்துள்ளதுடன் இறப்பர் மற்றும் ஆபரணங்களுக்கான உத்திகள் நிறைவடைந்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் உதவியுடன் கைத்தொழில் ரீதியான துணை ஒப்பந்தமிடல் மற்றும் பங்குடமை பரிவர்த்தனையொன்று மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலதிபர்கள் உற்பத்திப் பாகங்களை, கூறுகளை அல்லது செய்முறைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதில் ஈடுபாடு கொண்டுள்ள பாரிய அளவு தயாரிப்பாளர்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கு அவர்களை இயலச்செய்யும் விதத்தில் அவர்களுக்கு பொருத்தமான அறிவாற்றலையும், தொடர்புகளையும் பெற்றுக்கொடுப்பதற்கான உதவிகளை வழங்குவதாகவும் இருந்தது. இலங்கை துணை ஒப்பந்தமிடல் மற்றும் பங்குடமைப் பரிவர்த்தனையானது உலகளாவிய ரீதியில் 30 நாடுகளில் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு நிறுவியுள்ள 60 துணை ஒப்பந்தமிடல் மற்றும் பங்குடமைப் பரிவர்த்தனையுடன் இணைக்கப்படும். ஆரம்பத்தில், பரிவர்த்தனை இறப்பர், பிளாத்திக்கு, மின்னியல் மற்றும் மின்னியல் பொறியியல் மற்றும் தும்பு என்பனவற்றின் துணை உற்பத்திகளில் கவனம் செலுத்தியது. இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள் 300 தொழில் முயற்சிகளை உள்ளடக்குவதாக இருந்ததுடன் 2001 இறுதியில் ஏறத்தாழ 125 தொழில்முயற்சிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

நலிவின் தொடக்கத்திலுள்ள, நலிவடைந்த மற்றும் முறிவடைந்து போன கைத்தொழில் முயற்சிகளை அடையாளங்காண்பதற்கும், அவற்றிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளை விதந்துரைப்பதற்கும் பொறுப்பாகவுள்ள தொழில்முயற்சிகள் அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிலுள்ள கைத்தொழில் மீளமைத்தல் பிரிவு, 2001இல் 250 நலிவுள்ள கைத்தொழில் முயற்சிகளிலிருந்து முன்மொழிவுகளைப் பெற்றுக்கொண்டது. இப்பிரிவின்கீழ் தற்பொழுது ஏறத்தாழ 15 நலிவடைந்த கைத்தொழில் செயல்முயற்சிகளை மீளவமைப்பதற்கான தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழில்முயற்சிகள் அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு கைத்தொழில்களைப் பிரதிநித்துவம் செய்யும் சம்மேளனங்களின் கோரிக்கைகளுக்கும் நலிவுற்ற கைத்தொழில்களின் புத்துயிர்ப்பு தொடர்பான பல்வேறு குழுக்களினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களுக்கும் இணங்க கைத்தொழில் மீளவமைத்தல்/ புத்தாக்க அதிகாரசபையொன்றினை உருவாக்க எண்ணியுள்ளது.

## கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

உள்நாட்டுத் தயாரிப்பாளர்களின் தரம், உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மை என்பனவற்றினை மேம்படுத்துவதற்காக உற்பத்தி செய்முறையில் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்ற உள்நாட்டுத் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1996இல் அறிமுகப்படுத்தப்பட்ட இறை ஊக்குவிப்புத்திட்டம் 2001 வரவு செலவுத் திட்டத்தில் மேலும் ஈராண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இத் திட்டம் புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள கைத்தொழில் முயற்சிகளுக்கான ஒப்புதலளிக்கப்பட்ட பொறிகளையும் கருவிகளையும் தீர்வையின்றிய இறக்குமதியையும் அதிகரித்த இலாபங்களின் மீது ஐந்தாண்டு விரிவாக்கல்களையும் வழங்குகின்றது. 2000ஆம் ஆண்டின் 18 புதிய செயற்றிட்டங்களுக்கும் 26 ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களுக்கும் வழங்கப்பட்ட ஒப்புதல்களுடன்

ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் 18 புதிய செயற்றிட்டங்களுக்கும், 46 ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களுக்கும் முறையே ஏறத்தாழ ரூ.443 மில்லியன் மற்றும் ரூ.1740 மில்லியன் கொண்ட முதலீட்டுக் கடப்பாடுகளுடன் நவீன பொறித் தொகுதிகளையும் முன்னேற்றங்கண்ட தொழில் நுட்பங்களையும் இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. இந்த ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் ஏறத்தாழ 2543 ஆட்களுக்கு புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் என மதிப்பிடப்பட்டது.

உள்நாட்டு புடவைத் தயாரிப்பாளர்கள் தமது புடவை ஆலைகளை நவீனமயப்படுத்துவதனையும், புதிய தொழில்நுட்ப உருவாக்கத்தினை அறிமுகப்படுத்து வதனையும் ஊக்குவிப்பதற்காக உள்நாட்டுப் புடவை கைத்தொழிலுக்காக 1998இல் மீளஅமைத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. நிதிஅமைச்சின் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் படி 2001 திசெம்பர் இறுதியில் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக 130 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 127 விண்ணப்பங்கள் நிவாரண வழிமுறைகளுக்காகக் கவனத்திலெடுக்கப்பட்ட வேளையில் 3 விண்ணப்பங்களின் பரிசீலணையின் கீழ் இருந்தன. 2001 இறுதியில் ரூ.4003 மில்லியன் கொண்ட வெளிநின்ற மொத்தப்படுகடன் புடவைப் படுகடன் மீட்சி நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதற்கென அடையாளங் காணப்பட்டன. படுகடன் மீட்சிக்கான முத்தரப்பு உடன்படிக்கையின் இறுதி வேலைகள் முற்றுப்பெற்றவுடன் 108 தயாரிப்பாளர்களது ரூ.3381 மில்லியன் கொண்ட வெளிநின்ற மொத்தப்படுகடன் தொகை இவ்வாண்டு இறுதியில் புடவைப் படுகடன் மீட்சி நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. 2001 இறுதியில் 111 தொழில் முயற்சிகள் மீளமைத்தல்/ நவீன மயப்படுத்தல் முன்மொழிவுகளை சமர்ப்பித்ததுடன் இவற்றில் 34 தொழில்முயற்சிகள் மீளமைத்தல்/ நவீனமயப்படுத்தல் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியியல் வசதிகளுக்கான இசைவினைத் தமது வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளன. இந்த 34 தொழில்முயற்சிகளுக்கும் அவற்றின் மீளமைத்தல்/ நவீனமயப்படுத்தல் முன்மொழிவுகளின் நடைமுறைப்படுத்தலுக்காக வங்கிகள்/ நிதியியல் நிறுவனங்கள் ரூ.222.5 மில்லியன் கொண்ட கடன் வசதிகளை வழங்கின. ஆண்டின் முதலரைப்பகுதியில் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இயங்கும் உள்நாட்டுப் புடவை அனுமதிப்பங்கு ஒதுக்கீட்டுக்குழு, முதலீட்டுச்சபையின் ஒப்புதல் பெற்ற தயாரிப்பாளர் ஒருவர் உட்பட நான்கு உள்நாட்டு புடவை தயாரிப்பாளர்களிடையே ஏறத்தாழ 7.5 மில்லியன் மீற்றர் துணியினை அனுமதிப்பங்கு முறையில் ஒதுக்கீடு செய்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தகுதிபெற்ற புடவைத் தயாரிப்பாளர்களுக்கு வட்டி உதவிக் கொடுப்பனவு திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவும். தொழில்முயற்சிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற மீளமைத்தல்/ நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தினைக் கண்காணிப்பதற்கான குழுவொன்றினை ஏற்படுத்தவும் நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளன. மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ நிவாரணத்தையும் தகுதியற்ற புடவைத் தயாரிப்பாளர்கள் செயற்றிட்டத்தோடு தொடர்புடைய பொறிகள், கருவிகள், உதிரிப்பாகங்கள், உள்ளீடுகள் மற்றம் புடவைக் கைத்தொழிலுக்கான துணைப்பொருட்கள் என்பனவற்றை தீர்வையற்ற அடிப்படையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

ஆடைக் கைத்தொழில் தொழிற்படுவதற்கு ஒரே மாதிரியான வசதிகளை வழங்கும் விதத்தில் 2001 வரவு செலவுத் திட்டம் முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா அமைப்புக்களிடையே ஒழுங்குமுறைப் படுத்தல் மற்றும் இணக்குவிப்புக்களுக்கு முன்மொழிந்தது. இதன் விளைவாக எதிர்காலத்தில், அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளும் தொழில் முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சினால் கையாளப்படவுள்ள வேளையில் வரியும் சுங்கவிடயங்களும் முறையே உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினாலும், சுங்கத் திணைக்களத்தினாலும் கையாளப்படும். அதன் பின்னர் முதலீட்டுச்சபை தொடர்பான முகவராண்மைகளின் உதவியுடன் முதலீடுகளை மேம்படுத்துவதிலும் முதலீட்டாளர்களுக்கு வசதியளிப்பதிலும் முழுக் கவனத்தையும் செலுத்தும். இதன் விளைவாக, ஏற்றுமதிப் பதனிடல் வலயத்திற்குள் அமைந்துள்ளவை தவிர்ந்த அனைத்து முதலீட்டுச்சபை தொழில்முயற்சிகளும் சுங்கத் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு முன்மொழியப்பட்டது. இவ் வழிமுறைகள் முதலீட்டுச் சபையின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதுடன் அரசிறை ஒழுங்குகளையும் பல்வேறு சலுகைகள் மற்றும் வசதிகளின் துஷ்பிரயோகங்களையும் தடுத்துவிடுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழான சலுகைகள் அனுபவிக்காத, தற்பொழுது ஆடைத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சிகள் பன்னாட்டு ரீதியில் புகழ்பெற்ற வாங்குனர்களிடமிருந்து நன்மதிப்பையும் வருடாந்த மொத்தப்புரள்வாக ரூ.1 மில்லியன் அல்லது ஆகக்குறைந்தது 150 ஆட்களுக்கு தொழில்வாய்ப்பையும் வழங்குமிடத்து அவற்றிற்கு அத்தகைய சலுகைகள் வழங்கப்படும்.

## தேசிய உற்பத்தியாக்க மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

தனியார்துறை மற்றும் அரசதுறை ஆகிய இரண்டினதும் உற்பத்தியாக்கத்தினை அதிகரிக்கும் நோக்குடன் 1997இல் தொடங்கப்பட்ட தேசிய உற்பத்தியாகக் பத்தாண்டு நிகழ்ச்சித் திட்டம் (1997-2006) 2001ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. தேசிய உற்பத்தியாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் தாக்கத்தினை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தியாக்க செயலகம் எட்டு மாவட்டங்களில் உற்பத்தியாக்க கோட்பாட்டின் விழிப்புணர்வு மட்டத்தினையும் மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் தன்மையினையும் அளவிடுவதற்கான ஆய்வொன்றினையும் நடத்தியது. தேசிய மட்டத்தில் உற்பத்தியாக்கம் தொடர்பான நடவடிக்கைகளை பயனுள்ள முறையில் நடைமுறைப் படுத்தும் நோக்குடன் தேசிய உற்பத்தியாக்கச் செயலகம், பெரும்பாலும் அனைத்து அமைச்சுக்களிலும் அதேபோன்று இவ்வமைச்சுக்களின் அதிகாரத்தின்கீழ் வரும் திணைக்களங்களிலும் உற்பத்தியாக்க தொடர்பு அலுவலர்களை நியமித்த உற்பத்தியாக்க நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்ட வெற்றியின் மட்டம் தொடர்பாக தெரிந்தெடுக்கப்பட்ட அரச மற்றும் தனியார் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வுகளினூடாக தகவல்களைச் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் தேசிய உற்பத்தியாக்கம் செயலகம் தொடங்கியது. தனியார்துறை முகாமையாளர்களிடையே பரந்தளவு பிரபல்யத்தைப் பெற்றிருந்த உற்பத்தியாக்கம் தொடர்பான மாதாந்த விரிவுரைத் தொடர்கள் உற்பத்தியாக்க கோட்பாடுகளின் பரந்தளவிலான பிரயோகம் பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்கியது. உற்பத்தியாக்கம் பற்றி பள்ளிச்சிறார்களுக்கு கல்வியூட்டும் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கும் விதத்தில் தேசிய உற்பத்தியாக்க செயலகத்தின் ஆலோசனையுடன் கல்வி தேசிய நிறுவனம், பள்ளிக்கூட பாட விதானத்தில் உற்பத்தியாக்க கோட்பாட்டினை அறிமுகப் படுத்துவதற்காக ஆசிரியர் வழிகாட்டி நூல் ஒன்றினை வடிவமைத்தது. உயர்ந்த மொத்த உற்பத்தியாக்கத்தினை அடைவதற்கு தனிப்பட்டவர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் இயலாற்றலை உயர்த்தும் விதத்தில் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கு முழுமையான தரமுகாமைத்துவம், அளவுக்குறியீடு, முகாமைத்துவ மாற்றம், வியாபார செய்முறை, மீள் பொறியியற்படுத்தல் போன்ற முன்னேற்றங் கண்ட அணுகுமுறைகள் தேசிய உற்பத்தியாக்க செயலகத்தினால் சிந்திக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

## 4.8 கைத்தொழில் அமைவிடம்

மேல் மாகாணத்திற்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் கைத்தொழில்களை மேம்படுத்துவது, அரசின் கைத்தொழில் மயமாக்கல் உபாயத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இக் குறிக்கோளை அடைவதற்காக பல கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் இறை ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. துறைமுகம், வானூர்தி நிலயங்களுக்கு அண்மையாக உள்ள தன்மை மற்றும் ஒப்பீட்டு ரீதியில் கிடைக்கத்தக்கதாகவுள்ள உள்ளமைப்பு வசதிகள் என்பனவற்றின் காரணமாக, பொதுவாக, கைத்தொழிலபதிபர்கள் தமது தொழிற்சாலைகளை மேல் மாகாணத்திலமைப்பதற்கே முன்னுரிமையளிக்கின்றனர். 2001 திசெம்பர் இறுதியில் தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழில் முயற்சிகளிலும் ஏறத்தாழ 86 சதவீதம் கம்பகா மற்றும் கொழும்பு மாவட்டங்களிலேயே அமைந்திருந்தது. இவ்விரு மாவட்டங்களிலும் கைத்தொழில்கள் அதிகளவில் குவிந்திருந்தமை தொழிலாளர் பற்றாக்குறை, வீதி நெருக்கடி, உண்மைச்சொத்து விலைகளின் உயர்வு, சூழல் மாசடைதல், மாகாணத்தின் முக்கிய நகரங்களில் நெருக்கடி என்பன உட்பட பல பிரச்சனைகளை உருவாக்கியுள்ளன. இப் பிரச்சனைகளைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் கைத்தொழில் பூங்காக்கள்/ கைத்தொழில்பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அதற்கேயான பொருளாதார நிலைய நிகழ்ச்சித் திட்டம், கைத்தொழில் நகர நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சிறிய-ஏற்றுமதி பதனிடல் வலய நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றின் கீழ் மற்றைய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.

முதலீட்டுச் சபை, மீரிகம, வட்டுபிட்டிவல, மிரியெவல, மாவத்தகம, பொல்காவல, கொரண ஆகிய இடங்களிலுள்ள பிரதேச சிறிய ஏற்றுமதி பதனிடல் வலயங்களிலும் மல்வத்தை சீதாவாக்க மற்றம் கண்டியிலுள்ள ஏற்றுமதி பதனிடல் பூங்காக்களிலும் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. சிறிய ஏற்றுமதி பதனிடல் வலயத்தின் கீழ் உள்ள செயற்றிட்டங்களின் மொத்த முதலீடுகள் 2001 இறுதியில் ரூ.2771 மில்லியன்களாக மதிப்பிடப்பட்டதுடன் தொழில்நிலையை உருவாக்கம் 5814 ஆட்கள் எனவும் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பூங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள செயற்றிட்டங்களின் மொத்தமுதலீடு ரூ.4,300 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. இச் செயற்றிட்டங்கள் 2001 இறுதியில் 12,600 தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும்

**அட்டவணை 4.13**
**உயர் தொழில்நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள் 2000 இறுதியில் உள்ளவாறு (அ)**

| வகை | புதிய | | | ஏற்கெனவேயுள்ள | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை | 29 | 2,715 | 2,553 | 85 | 7,380 | 5,136 | 114 | 10,095 | 7,689 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 15 | 768 | 1,188 | 47 | 1,895 | 2,948 | 62 | 2,663 | 4,136 |
| 3.மர, மர உற்பத்திகள் | 8 | 283 | 665 | 11 | 565 | 574 | 19 | 848 | 1,239 |
| 4.தாளும் தாள் உற்பத்திகளும் | 12 | 737 | 825 | 40 | 2,218 | 1,830 | 52 | 2,955 | 2,655 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 66 | 3,071 | 3,904 | 158 | 6,150 | 7,928 | 224 | 9,221 | 11,832 |
| 6.உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 13 | 2,665 | 1,261 | 15 | 2,492 | 1314 | 28 | 5,157 | 2,575 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 8 | 1,094 | 841 | 22 | 1,225 | 1,228 | 30 | 2,319 | 2,069 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 26 | 1,229 | 1,702 | 56 | 2,833 | 3,197 | 82 | 4,062 | 4,899 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 22 | 1,779 | 1,843 | 25 | 837 | 1,005 | 47 | 2,616 | 2,848 |
| 10.பணிகள் | 18 | 629 | 1003 | 35 | 4,251 | 1,775 | 53 | 4,879 | 2,778 |
| மொத்தம் | 217 | 14,969 | 15,785 | 494 | 29,845 | 26,935 | 711 | 44,814 | 42,720 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு.

என எதிர்பார்க்கப்பட்டது. அவிசாவலையிலுள்ள சீதாவாக்க கைத்தொழில் பூங்கா பன்னாட்டுத் தரத்திலான 10 தொழிற்சாலைகளை உள்ளடக்கி 71 தொழிற்சாலைத் தொகுதிகளுக்கு வசதிகளை வழங்கியது. 2001 இறுதியில் 31 தொழிற்சாலைகள் வர்த்தகத் தொழிற்பாட்டி லிருந்ததுடன் ஏறத்தாழ 7000 ஆட்களுக்கு நேரடித் தொழில் வாய்ப்புக்களை வழங்கியது. இப் பூங்காவின் உள்ளார்ந்த மொத்த வலையமைப்பு 50,000 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது.

முதலீட்டுச்சபை தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு உலக வர்த்தக நிலயத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்காவொன்றினை நிறுவியுள்ளது. இச் செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோள் மென்பொருள் அபிவிருத்திக்கு வசதியளிப்பதாகும். தொழில்முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமாக கொழும்பிற்கு வெளியே பல கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்வதற்கு பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சு, பல்வேறு பிரதேசங்களிலும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்குடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 13 கைத்தொழில் பேட்டைகளை நிறுவியது. அண்மைய எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்காக மேலும் நான்கு அமைவிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இக் கைத்தொழில் பூங்காக்கள் 400 கைத்தொழில் அலகுகளை உள்ளடக்கத்தக்க இயலளவைக் கொண்டுள்ளன. உள்ளார்ந்த வாய்ப்பு வளங்களைக் கொண்ட முதலீட்டாளர்கள் தமது கைத்தொழில்களை நிறுவுவதற்காக தங்கொட்டுவ, மார்க்கந்துற, குறுவிட்ட(பரடைசு), பெலியத்த, மடவள-உல்பத்த(நாலந்த), லக்சாயுயன, நவகம்புர, கொலன்னாவ மற்றும் இரத்மலானை போன்ற கைத்தொழில் பூங்காக்களில் காணித்துண்டுகளை ஒதுக்கும் வேலைகள் தொடங்கப் பட்டுள்ளன. உள்ளார்ந்த வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்களுக்காக ஏறத்தாழ 155 காணித்துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பேட்டைகளில் ஏறத்தாழ 49 கைத்தொழில் செயற்றிட்டங்கள் வர்த்தகத் தொழிற்பாட்டிலுள்ள 6062 ஆட்களுக்கும் தொழில்வாய்ப்புக்களை வழங்கியுள்ளன.

இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2001 திசெம்பர் இறுதியில் 21 மாவட்டங்களில் 162 ஆடைத் தொழிற்சாலைகள் வர்த்தக உற்பத்தியிலீடுபட்டிருந்தன. இந்த 162 தொழிற் சாலைகளில் 141 தொழிற்சாலைகள் (அல்லது 87 சதவீதம்) கொழும்பு, கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே அமைந்திருந்தன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் பொலனறுவ போன்ற கடினப் பிரதேசங்களில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருந்தமையேயாகும். 1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஐம்பது ஆடை தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2001 இறுதியளவில் 67 ஆடைத் தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்றிட்டங்களைத் தெரிவு செய்வதற்கான பிரமாணம், செயற்றிட்டம் அமையவுள்ள பிரதேசத்தின் தொழிலற்றோரின் செறிவினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இத் திட்டத்தின் கீழ் 19 மாவட்டங்களில் 60 தொழிற்சாலைகள் வர்த்தக தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்தன.